விலை ரூபா: 15.00

Registered as a News paper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 18 புதன்கிழமை (02.07.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 196




# ஜனாதிபதியை ஏற்றச் சென்ற ஹெலிகொப்டர் மீது தாக்குதல்

## உடனடியாக ஹெலி தரையிறக்கம்

(மட்டக்களப்பு)

அம்பாறை அறுகம்பைப் பால திறப்பு விழாவுக்காகச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஏற்றச் சென்ற ஹெலிகொப்டர் மீது நேற்றுப் பிற்பகல் 1.20 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.இந்தத் தாக்குதலில் அக் ஹெலிகொப்டர் சேதத்துக்குள்ளான நிலையில் உடனடியாகத் தரையிறக்கப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாந்தோட்டை முகாம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல்

(கிளிநொச்சி)

அம்பாந்தோட்டை கும்புக்கன்ஓயா படை முகாம் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் பல படையினர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாவது,

அம்பாந்தோட்டை கும்புக்கன்ஓயாப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6.20 மணியளவில் படையினரின் முகாமில் ஒன்றுகூடல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது விடுதலைப்புலிகள் அதிரடித் தாக்குதலை நடத்தினர்.

இத் தாக்குதலில் பல படையினர் கொல்லப்பட்டனர். பல படையினர் காயமடைந்தனர். மேலும் 2 (12 ஆம் பக்கம் பார்க்க)

## கோதுமை மாவின் விலை 79 ரூபாயாகக் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்குக் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட கோதுமை மா 2 ரூபாயினால் விலை குறைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இப் புதிய விலையின் அடிப்படையில் 24 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்பட்டு வருவதாகவும் ஒரு கிலோ கோதுமை மாவை (12 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

தரம்-05 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள் - 07

பகுதி -I

## ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் அரசை நெருக்கடிக்குள்ளாக்கும் சதி

### பாலம் திறப்பு விழாவில் ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரபல ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்துவதன் மூலம் அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் சதித் திட்டம் ஒன்று செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டினார்.

கிழக்கில் புதிதாக அமைக்கப்பட்ட அறுகம்பைப் பாலத்தை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு ஜனாதிபதி தொடர்ந்து கூறியதாவது, பயங்கரவாதப் பிடியிலிருந்து அப்பாவி மக்களை மீட்கும் அதேவேளை நாடு முழுவதிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

இதனைத் தடுத்து நிறுத்தும் முகமாகவே சில தீய சக்திகள் சதி முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. பிரபல ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தி அரசாங்கத்திற்கு சேறு பூசுவதும் அதில் ஒரு முயற்சியாகும்.

எனினும் மக்களை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும். இதனை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும். மனித உரிமை மீறல்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் போன்ற குற்றச்சாட்டுக்கள் மூலம் சிலர் அரசாங் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இராணுவத்திற்கு இந்தியாவில் விசேட பயிற்சி

(கொழும்பு)

2008-2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சுமார் 500ற்கும் மேற்பட்ட படை வீரர்களுக்கு விசேட பயிற்சிகளை இந்தியா வழங்கவுள்ளது.

பயங்கரவாதத் தடுப்பு,வனாந்திரத் தாக்குதல், நீர்மூழ்கிக் கப்பல் மீதான தாக்குதல், ஆட்லறித் தாக்குதல் உள்ளிட்ட பல முக்கிய துறைகளில் இலங்கைப் படை வீரர்களுக்குத் தீவிர பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன.

மகாராஷ்டிரா, மிஸோராம் போன்ற இந்தியாவின் முன்னணி இராணுவப் பயிற்சி நிலையங்களில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இராணுவத் தளபாடங்களை வழங்குவதனை நிறுத்திக் கொண்டும் ஆயுதப் பயிற்சிகளை வழங்கியும் இரு வேறுபட்ட அணுகுமுறைகளை இந்தியா (12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கைது செய்யப்பட்ட 92 பேர் பொலிஸ் விசாரணையில்

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியிலும் மன்னார் வீதி தாலிக்குளம் பகுதியிலும் மூன்று பெண்க்ள் உட்பட 92 பேர் படையினரால் கைது செய்யப்பட்டு வவுனியாப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் உடன்டியாக திங்கட்கிழமை மாலை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று கைது செய்யப்பட்டவர்களைப் பார்வையிட முயன்றபோதிலும் அதற்குரிய அனுமதி வழங்கப்படவில்லை.

நேற்றுக் அதிகாலை முதல் பொலிஸ் நிலையப் பகுதியில் சூழ்ந்து நின்ற பெரும் எண்ணிக்கையான (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச வேலை நாள்களை குறைக்க ஆலோசனை

(கொழும்பு)

அரசாங்க நிறுவனங்களில் வேலை நாள்களைக் குறைப்பது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதிகரித்துச் செல்லும் எரிபொருள்விலையேற்றத்தினால் ஏற்படும் செலவீனங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வாரத்தில் 4 நாள்கள் மாத்திரம் காரியாலயப் பணிகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரச ஊழியர்கள் வாரத்தில் 5 நாள்கள் பணியாற்றுவத (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தைப் பகுதியில் இருந்து செஞ்சிலுவைச் சங்கம் விலகல்

(வவுனியா)

ஓமந்தைச் சோதனைச் சாவடிப் பகுதியில் நேற்றுப் பிற்பக்ல் இடம்பெற்ற சம்பவம் ஒன்றையடுத்து அந்தச் சோதனைச் சாவடியில் கடமையில் ஈடுபடுவதிலிருந்து தாங்கள் விலகியிருப்பதற்கு முடிபு செய்திருப்ப்தாக சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் தகவல் அதிகாரி சரசி விஜேயரட்ண தெரிவித்தார்.

இந்தச் சோதனைச் சாவடியூடாகப் பயணம் செய்யும் பிரயாணிகளினதும் தமது ஊழியர்களினதும் பாதுகாப்பு தமக்கு முக்கியமானது என்பதனால் இந்தப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதும் தமது பணியாளர்கள் திரும்புவார்கள் என்றும் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் தகவல் அதிகாரி தெரிவித்தார்.


எனினும் அங்கு நடைபெற்ற சம்பவம் என்ன என்பது (12 ஆம் பக்கம் பார்க்க)


## மாங்குளத்தில் 8 விமானங்கள் ஒரே நேரத்தில் குண்டு வீச்சு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மாங்குளத்திற்கு வட கிழக்கே 8 கிலோமீற்றர் தொலைவிலுள்ள விடுதலைப்புலிகளின் பயிற்சித் தளம் ஒன்றின் மீது நேற்றுக் காலை விமானப் படைக்குச் சொந்தமான 8 குண்டு வீச்சு விமானங்கள் ஒரே நேரத்தில் குண்டுத் தாக்குதல் நடத்தியதாகப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது.

விடுதலைப்புலிகளின் வான் படையினர் போன்ற விசேட அணியினருக்கான இந்தப் பயிற்சி நிலையத் (12 ஆம் பக்கம் பார்க்க)





வட்டு.மத்திய கல்லூரி பரிசளிப்பு விழாவில் வட்டு.இந்து வாலிபர் சங்க தலைவரும் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியருமான இ.குகன் உரையாற்றுவதையும் கல்லூரியின் தலைசிறந்த மாணவருக்கான வட்டு.இந்து வாலிபர் சங்க 'வாகீசர்' விருதினை செல்வி மோ.மைதிலிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் வழங்கி கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: கோபி)

# தேசிய பாடசாலைகளுக்குத் தெரிவான யாழ்.கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

கல்வியியற் கல்லூரியில் இருந்து திறமை அடிப்படையில் தேசிய பாடசாலைகளுக்கு தெரிவு செய்யப்பட்டு ஆசிரியர் சேவையின் தரம் 3-1 தரத்திற்கு நியமனம் வழங்குவதற்கான நேர்முக பரீட்சை எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பெலவத்தை பத்தரமுல்லையில் அமைந்துள்ள கல்வி. அமைச்சின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு டிப்ளோமா தகைமை பெற்ற 35 மாணவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கொழும்பு செல்வதற்கான பயண அனுமதியை பெறுவதற்கு தமக்குரிய பிரதேச செயலகங்களில் உரிய விண்ணப்பப் படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி வழமையான முறைப்படி உறுதிப்படுத்தி தன்னிடம் சமர்ப்பிக்குமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரர்கள் காலம் தாழ்த்தாது பிரயாணத்தினை மேற்கொள்ள தேவையான பாதுகாப்பு அனுமதிக்கு விண்ணப்பித்து தமது விபரத்தினை புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் நாளை மறுதினத்திற்கு முன்னர் பதிவு செய்து பயணத்தினை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் விபரம் வருமாறு,

**ஆரம்பக்கல்வி**

என்.ஜெயரூபன், எல்.கஜலக்மி, ரி.மீரா, கே.தர்சினி, எஸ்.தனப்பிரியா, வி.கிருபன்தனி, எஸ்.காஞ்சனா,ஏ.சர்மிளர்.

**விஞ்ஞானம்**

வி.சரிதா,கே.கார்த்திகா, எஸ்.கஜவதனி, எஸ்.குகவதனா .

**கணிதம்**

எஸ்.சுஜின்தன்,பி.சசிகலா, யு.தனசங்கர் பி.கிருஷா, பி.பிரியதர்சினி,என்.வித்தியா, ஆர்.எஸ்.மயூரன்.

**சித்திரம்**

எஸ்.கஜேந்திரன், என்.சைமொன், எஸ்.கோகுலன்,வி.தாஜகன்

ஆர்.பிரபு (சங்கீதம்), எம்.நர்மதா (நடனம்), எஸ்.பகீரதி (விசேட கல்வி), ஆர்.விதனா (விவசாயம்).

**ஆங்கிலம்**

ரி.கேமலோஜினி, எஸ்.அனுசீலா ; சி.சிந்துஜா, எஸ்.சங்கீதா, ஜே.ஏ.சிராந்தி, என்.தாட்சாயினி,வை.யசிதெரா, எஸ்.டக்ளஸ். (சு)

# பேரினவாத அரசாங்கத்துக்கு தமிழினம் விரைவில் பதிலடி கொடுக்கும்

## புலிகளின் துணைத்தளபதி அமுதாப் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

சிங்களப் பேரினவாத அரசாங்கத்துக்கு தமிழினம் விரைவில் தகுந்த பதிலடி கொடுக்கும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் துணைத் தளபதி அமுதாப் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற லெப்.கேணல் வாணன், மேஜர் ஜெயசீலன் ஆகிய மாவீரர்களின் வீரவ்ணக்க நிகழ்வில் வீரவணக்கவுரை ஆற்றியபோது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இன்றைய அரசியல் சூழலை எடுத்துக் கொண்டால் மகிந்த அரசாங்கம் உலகம் எல்லாம் ஓடி போர்க்கலங்களை வாங்கிக் குவித்து படை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

தமிழினம் கடந்த காலத்தில் கூட சிங்களப் படைகளின் போர் நடவடிக்கைகளை எதிர்கொண்டு வெற்றிகளை ஈட்டியுள்ளது.

இந்த கிளிநொச்சி நகரம் கூட ஒரு காலத்தில் சிங்களப் படைகளின் வன்பறிப்புக்குள் இருந்து விடுதலைப் புலிகளினால் ஓயாத அலை -02 நடவடிக்கை மூலம் மீட்டு எடுக்கப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரியும்.

இன்றைய சிங்களப் படைகளின் போர் நடவடிக்கைகளை தமிழினம் முறியடித்து சிங்களப் பேரினவாத அரசாங்கத்துக்கு தகுந்த பதிலடி கொடுக்கும் காலம் நெருங்கி வருகின்றது என்றார் அவர். (சு-5)

# பட்டதாரிகள் அனைவருக்கும் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகள் சுமார் ஆயிரத்து 500 பேர் வரை உள்ளனர். அவர்களில் 650 பேர் வரை நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டனர்.

ஆனால் அவர்கள் அனைவருக்கும் வேலை கிடைக்கும் என்பதில் நிச்சயமில்லை. அதேவேளை வேலைவாய்ப்பு கிடைக்காத பட்டதாரிகள் 800 பேருக்கு மேல் உள்ளனர்.

ஆசிரியர் நியமனத்துக்குரிய நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படாத 250 பேர் மற்றும் பரீட்சைக்கு தோற்றாதோர் என 500க்கும் மேற்பட்டோர் தமக்கும் நியமனத்திற்கான சாதகமான பதிலை வழங்கக் கோரி யாழ். வலயம் முன்பாக போராட்டம் நடத்தினர்.

வலயத்தை முற்றாகப் பூட்டியோ, மறியற் போராகவோ நடத்தவில்லை. ஆனால் இப் போராட்டம் பாரதூரப்படுத்தப்பட்டு மறியற் போராக நடந்ததாக மிகைப்படுத்தப்பட்டது.

மேலும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களது பாதிப்புக்கள் தொடர்பாகவும் நாம் வருத்தத்தை தெரிவித்துக்கொள்வதுடன் அவர்களது ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம்.

கடந்த காலங்களில் ஆசிரியர் நியமனம் கிடைக்காதோருக்கு நிர்வாகத் துறையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது.

ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கு ஆயிரத்து 500 வரையான வெற்றிடம் உள்ளதாக விண்ணப்பம் கோரப்பட்டபோதும் ஆயிரத்து 200 பேரே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டனர்.

300 பேர் வரை ஏற்கனவே, நிதியுதவியாளர்,செயற்திட்ட உதவியாளராக பணிபுரிவோருக்கு நியமனம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டதாக மாகாண கல்வி அமைச்சு அதிகாரிகள் குறிப்பிட்டனர். வேலையற்ற பட்டதாரிகளது இப்போராட்டமானது பாதுகாப்பு காரணங்கள் மற்றும் உயர் அதிகாரிகளது வேண்டுகோள்ளுக்கு இணங்க தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

எனினும் வேலையற்ற பட்டதாரிகள் தொடர்ந்தும் தமது கோரிக்கைகளை சாத்வீகமான வழியில் முன்னெடுக்கவுள்ளனர். அதற்கு அனைவரது ஆதரவும் அவசியமாகும்.

வேலையற்ற பட்டதாரிகள் தமது வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்ள போராட்டம் முன்னெடுப்பது அவர்களது உரிமையாகும். அதனை யாரும் மறுக்க முடியாது.

வேலையற்ற பட்டதாரிகள் ஆகிய நாம் ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கு தோற்றிய அனைவருக்கும் நியமனம் வழங்க வேண்டுமென்றும் பரீட்சைக்குத் தோற்றாதோரது கோரிக்கையையும் உரிய விதத்தில் பரிசீலிக்க வேண்டுமென முன்வைக்கும் கோரிக்கைகளை உரிய தரப்புக்கள் விரைவாக பரிசீலித்து சாதகமான பதிலை வழங்க வேண்டும் என்றும் அவ்வறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (சு-5)


# அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

வலி.கிழக்கு பிரதேச முன்பள்ளி ஆசிரியர் சங்க அபிவிருத்தி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 30.06.2008 ஆம் திகதி வலி.கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு;

| பரிசுகள் | வெற்றி இலக்கம் |
|---|---|
| 1-ம் பரிசு | 14495 |
| 2-ம் பரிசு | 14095 |
| 3-ம் பரிசு | 13422 |

ஒரே வகையான 7 ஆறுதல் பரிசில்களுக்குரிய வெற்றி இலக்கங்களாவன,

*03372, 10330, 04538, 11429, 08735, 11955, 13423.*

*குறிப்பு:-* அதிர்ஷ்டசாலிகள் உரிய ஆதாரத்துடன் தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்து பரிசு பொருட்களை பெற்றுக் கொள்ளவும்.

**இச் சீட்டிழுப்புக்கு அனுசரணை புரிந்தோர் விபரம்,**

- முகாமையாளர், இலங்கை வங்கி, கோப்பாய்
- பொது முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம் (வ.ப), அச்சுவேலி
- உரிமையாளர், ஸ்ரீ கண்ணகி அச்சகம், அச்சுவேலி

(1420)

வலி.கிழக்கு பிரதேச சபை, முன்பள்ளி சமூகம், புத்தூர்


# திருகோணமலையில் ஆயுதங்கள் மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலை பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் பல பொலிஸ் விசேட குழுவினரால் மீட்கப்பட்டுள்ளது.

கைக்குண்டுகள்,அமுக்க வெடிகள்,துப்பாக்கி ரவைகள் சி-4 ரக வெடிபொருட்கள்,சினைப்பர் துப்பாக்கிகள் உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. அவ் ஆயுதங்கள் பொலித்தீன் பைகளில் மிகவும் கவனமாக பொதி செய்யப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (சு-5)

# கிணற்றுக்குள் வீழ்ந்து மூதாட்டி மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றுக்குள் தவறுதலாக வீழ்ந்ததில் மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார். இச்சம்பவம் நேற்று தொல்புரத்தில் இடம் பெற்றுள்ளது.

செல்வா வீதி தொல்புரத்தை சேர்ந்த கந்தையா பொன்னம்மா (வயது 88) என்பவரே உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப மூதாட்டி தனது வீட்டுக் கிணற்றுக்கு அருகில் நின்ற சமயம் கால் வழுக்கி கிணற்றுக்குள் வீழ்ந்ததாக உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது. (சு-4)

# இன்று ஒரு தகவல்

## அன்பின் பெருமை

"இந்த உலகத்தில் எல்லோருக்கும் மகிழ்ச்சிதரக் கூடிய ஒரு பொருள் எது?" இது ஒரு முக்கியமான கேள்வி! இந்தக் கேள்விக்கு பொருத்தமான பதிலை உங்களால் சொல்ல முடியுமா? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். பணம் என்று சொல்லலா்மா?

கையில் காசில்லாதவனிடம் ஒரு பத்து ரூபாயைக் கொடுத்தால் அது அவனுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும்! ஏற்கனவே வருமானவரி பிரச்சினையில் இருப்பவரிடம் "இன்னும் கொஞ்சம் பணம் இந்தாங்க" என்று சொன்னால்... அது சங்கடத்தைத்தான் கொடுக்கும்! சரி... இனிப்பு என்று சொல்லலாமா?

சர்க்கரை வியாதிக்காரருக்கு அது என்ன சந்தோஷத்தையா கொடுக்கும்? ஆக... எல்லோருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய வேறு ஏதோ ஒன்று இருக்கிறது.

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர் எல்லோருக்கும் இன்பம் தரக்கூடிய பொருள் எது? என்று அறிய ஆசைப்பட்டார். நாட்டு மக்களுக்கு பகிரங்கமாக ஒரு அறிவிப்பு செய்தார்.

"எல்லோருக்கும் இன்பம் தரக்கூடிய பொருள் எதுவாயிருந்தாலும் அதைக்கொண்டு வந்து அரண்மனையில் உள்ள கண்காட்சி மண்டபத்தில் வைக்கலாம். அந்தப்பொருட்களில் எது... எல்லோருக்கும் இன்பம் தரக்கூடியதோ அதை வைத்தவருக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசு!" என்று அறிவித்தார்.

ஜனங்கள் எல்லாம், அவரவர்க்கு என்னென்ன பொருட்கள் கிடைத்ததோ அதையெல்லாம் கொண்டு வந்து அரண்மனை காட்சி மண்டபத்தில் வைத்துவிட்டார்கள். காட்சி மண்டபத்துக்கு வந்த ராஜா ஒவ்வொன்றாக பார்த்துக்கொண்டுவந்தார்.

முதலில் ஒரு குயில் இருந்தது. குயிலின் பக்கம் வந்த ராஜா, "இந்தக் குயிலின் இன்னிசை இன்பம் தரக்கூடியது தான்... இருந்தாலும் காது கேளாதவர்களுக்கு இந்த இசை எப்படி இன்பம் தரமுடியும்? ஆக இது சரியில்லை!" என்று சொல்லிவிட்டார்.

அடுத்ததாக ஒரு அழகான மயில் தோகைவிரித்து ஆடிக்கொண்டிருந்தது. "இந்த மயிலின் ஆட்டம் மனதுக்கு இன்பம் தரக்கூடியது தான்... இருந்தாலும் பார்வையற்றோர் இந்த ஆட்டத்தைப்பார்த்து ரசிக்கமுடியாதே! அதனால் இதுவும் சரியில்லை!" என்று சொல்லி விட்டான்.

அதற்கு அடுத்தபடியாக பலவகையான இனிப்புப் பண்டங்களை வைத்திருந்தார்கள். வயதானவர்களுக்கும் நோயாளிகளுக்கும் இது இன்பம் தராது. துன்பம்தான் கொடுக்கும்! என்றான். இப்படியே பார்த்துக்கொண்டு போகும் போது அழகான மலர்கள், கனிகள், ஓவியங்கள் இருந்தன.

எதுவும் பொருத்தமாக தெரியவில்லை! சகலருக்கும் இன்பம் தரக்கூடிய வகையில் எதுவுமே இல்லை! கடைசியாக, ஒரு களிமண் பொம்மை இருந்தது. பசியால் வாடியிருக்கும் ஒருவருக்கு–ஒரு அம்மா இனிமையாகப் பேசி சோறூட்டுவது மாதிரி அந்த பொம்மையை செதுக்கியிருந்தார்கள்! அதற்குக் கீழ் "அன்பு" என்று எழுதியிருந்தது.

ராஜா ஒரு முடிவுக்கு வந்தார். அந்த பொம்மையை செதுக்கிய சிற்பியை வரவழைத்து அவருக்கே பரிசு கொடுத்தார். "அன்பு ஒன்றுதான்... எல்லோருக்கும் இன்பம் அளிக்கக்கூடிய பொருள். காது கேளாதவர்களும் அதைக்கேட்க முடியும். பார்வை இல்லாதவர்களும் அதைப் பார்க்க முடியும். குழந்தைகளும் அதை உணர முடியும்!" என்று விளக்கம் கொடுத்தார் ராஜா.

ஒரு வீட்டு வாசல் பக்கமாக மழைக்குவந்து ஒதுங்கினார் ஒருவர். மழை தூறிக்கொண்டேயிருந்தது. மிகவும் இருட்டிவிட்டது.

"இன்று ராத்திரி மட்டும் இங்கேயே தங்கிவிட்டு காலையில் போங்க!" என்றார். வீட்டிலிருந்தவர் உடனே இவர்... ரொம்ப தாங்கஸ்! ஒருபத்து நிமிஷத்தில் இதோ வருகிறேன்" என்று சொல்லிவிட்டு எங்கேயோ போனார் பின் பத்து நிமிஷம் கழித்து திரும்பிவந்தார்.

எங்கே போய்விட்டு வருகிறீர்கள்? என்று கேட்டார் வீட்டுக்காரர். "எங்க வீட்டுக்குப்போய் மனைவியிடம் இன்று ராத்திரி இங்கேயே தங்கிவிடுகிறேன்" என்று சொல்லி விட்டு வந்தேன் என்றார் அவர். அன்பில் இது ஒரு ரகம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஆள் மாறாட்டம் செய்து பிரான்ஸ் செல்ல முயன்ற யாழ்.இளைஞர் சென்னையில் கைது

(ஆலந்தூர்)

ஆள்மாறாட்டம் செய்து சென்னையில் இருந்து பிரான்ஸ் செல்ல முற்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். வினோத் (வயது 22) மற்றும் அந்தோணி (வயது 32) ஆகியோரே இவ்வாறு கைதாகியுள்ளனர். இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

சென்னையை அடுத்த மீனம்பாக்கம் அண்ணா பன்னாட்டு விமான நிலையத்தில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸுக்கும், மும்பைக்கும் செல்ல 2 விமானங்கள் தயாராக இருந்தன. இதன் பயணிகள் சோதனைகளை முடித்துக் கொண்டு விமானத்தில் ஏறுவதற்கான (போர் டிங் பாஸ்) அனுமதி அட்டைகளைப் பெற்று தயாராக இருந்தனர்.

அப்போது இளைஞர்கள் இருவர் தங்களிடம் இருந்த அனுமதி அட்டைகளை மாற்றிக்கொண்டு வெவ்வேறு இடத்தில் அமர்ந்ததை பாதுகாப்பு அதிகாரிகள் கண்டனர். உடனே அவர்களைப் பிடித்து விசாரணை நடத்தினார்கள்.

இருவரும் முன்னுக்கு பின் முரணாக பேசியதில் சந்தேகம் வலுவடைந்த நிலையில் இருவரையும் தனித்தனியாக விசாரணைக்குட்படுத்திய போது அவர்கள் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள் என தெரியவந்தது. மேலும் வினோத் மும்பைக்கு செல்ல பயண அனுமதி அட்டை பெற்றுள்ளார். அந்தோணி பிரான்ஸ்ஸுக்கு செல்ல அட்டை பெற்றுள்ளார்.

இந்நிலையில் இருவரும் விமானத்தில் ஏறும்முன் அட்டைகளைமாற்றிக்கொள்ள முனைந்துள்ளனர். இதனையடுத்து பொலிஸார் இச்சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய் துள்ளனர். இருவரும் ஆலந்தூர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# பருத்தித்துறை கல்விக்கோட்ட தமிழ் தினப் போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

**கவிதை ஆக்கம்** *பிரிவு-4*

க.பிரசாந்-ஹாட்லிக்கல்லூரி, வி.விவேகா-கொற்றாவத்தை அ.மி.த.க.,யோ.கலையரசி-பருத்தித்துறை சித்திவிநாய கர் வித்தி.

*பிரிவு-5*

சி.ரஜிபவன்-ஹாட்லிக்கல்லூரி, த.வினோ தன்-வேலாயுதம்மகாவித்தியாலயம், இ.பமிலா- சிதம்பராக் கல்லூரி.

**சிறுகதை ஆக்கம்** *பிரிவு-4*

ப.தர்சிகா-மெதடிஸ்த பெ. உ. த.பாடசாலை, ஜெ.சிவரூபி-வட இந்து மகளிர் கல்லூரி, சி.துஷாந்கி-பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தி.

*பிரிவு-5*

க.பிருந்தா-மெதடிஸ்த பெண்கள் உ.பா., சி.ராதிகா-வல்வை மகளிர் மகாவித்தியாலயம், யோ. கௌசல்யா-வட இந்து மகளிர் கல்லூரி.

**திறனாய்வுப்போட்டி** *பிரிவு-5*

ம.அன்ரனிடேவிட்ராசா-வேலாயுதம் மகா வித்தியாலயம்.

**குறுநாடக ஆக்கம்** *பிரிவு-5*

வி.யசிந்தன்-வேலாயும்மகா வித்தியாலயம், தே.நிருபனா-சிதம்பராக் கல்லூரி.

**இசைகுழு 1தரங்கள் 6,7,8,9**

1ஆம் இடம்:- ஹாட்லிக்கல்லூரி
2ஆம் இடம்:- மெதடிஸ்த பெண்கள் உ.பா.
3ஆம் இடம்:- பொலிகண்டி இ.த.க.பா.
4ஆம் இடம்:- வட இந்து மகளிர் கல்லூரி
5ஆம் இடம்:- சென்தோமஸ் றோ.க. பெண்.பா.

**நடனம் குழு 1 தரங்கள் 6,7,8,9**

1ஆம் இடம்:- மெதடிஸ்த பெண்கள் உ.பா.
2ஆம் இடம்:- வல்வை மகளிர் மகாவித்தி.
3ஆம் இடம்:- வட இந்து மகளிர் கல்லூரி
4ஆம் இடம்:- தும்பளை சிவப்பிரகாசம.வி.
5ஆம் இடம்:- கற்கோவளம் மெ.மி.த.க.பா.

**நாடகம் 9-12**

1ஆம் இடம்:- ஹாட்லிக்கல் லூரி.

# இராசிபலன்

02.07.2008
(ஆனி 18, புதன்கிழமை)
சதுர்த்தசி முற்பகல் 11.27 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 3.00 மணிவரை
இராகுகாலம் 11.57-01.27 மணிவரை
சுபநேரம்-04.27-05.57 மணிவரை
அமாவாசை விரதம்

| | |
|---|---|
| மேடம் | எடுத்தகாரியம் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி, போசன நன்மை. |
| இடபம் | வாக்குவாதம், முயற்சி தாமதம், பணவிரயம், உடல்நலக்குறைவு. |
| மிதுனம் | தெய்வசிந்தை, பெரியோர் சந்திப்பு, புதியமுயற்சி, போசனநன்மை. |
| கடகம் | பிரயாணம், காரிய அலைச்சல், சுபசெலவு, சயனசுகக்குறைவு. |
| சிங்கம் | கீர்த்தி, காரியநன்மை, மன மகிழ்ச்சி, தனலாபம். |
| கன்னி | அதிகாரம், நல்லமுயற்சி, போசன சுகம், நண்பர்கள் உதவி. |
| துலாம் | கட்டுப்பாடு, புதிய திட்டமிடல், எதிர்பாராத செலவு, காரியதாமதம். |
| விருச்சிகம் | மரியாதைக்குறைவு, வீண்பகை, முயற்சி தாமதம், போசனசுகம். |
| தனுசு | உடல்நலம், காரியநன்மை, தன்னம்பிக்கை, செல்வாக்கு. |
| மகரம் | தொழில் விருத்தி, முயற்சி கைகூடும், ஆரோக்கியம். |
| கும்பம் | வியாபார நன்மை, சிறுவியாதி, கௌரவக்குறைவு, முயற்சிதாமதம். |
| மீனம் | தாய்வழி உறவு, மனச்சஞ்சலம், உடல்நலக்குறைவு, சுபசெலவு. |

வளவன்

# கிழக்கிலிருந்து புறப்பட்ட கதிர்காம யாத்திரிகர்களுக்கு யாலயில் வரவேற்பு

(மாத்தறை)

கிழக்கு மாகாணத்திலிருந்து இரு வாரங்களுக்கு முன்னர் கதிர்காமத்துக்கு புறப்பட்ட பாத யாத்திரிகர்கள் ஞாயிற்றுக்கிழமை மாலை யால காட்டினை வந்தடைந்தனர். இந்த யாத்திரிகர்களை ஜனாதிபதியின் சிரேஷ்ட பிரதிச் செயலாளர் பத்மசிறி ராஜபக்ஷ லகுகலை பிரதேச சபைத் தலைவர் ஜே.எம்.ரி.எம். ரவீந்திரகுமார ஓகந்தை அதிரடிப் படை இன்ஸ்பெக்டர் வசந்த குமார ஆகியோர் வரவேற்றனர்.

பாத யாத்திரையாக வந்தவர்களுக்கு இராணுவத்தினர் குடிநீர் மற்றும் உணவு உட்பட சகல வசதிகளையும் மேற்கொண்டிருந்தனர். இதேவேளை நாளை வியாழக்கிழமை மாலை ஆரம்பமாகும் கதிர்காம ஆடித் திருவிழாவின் நிமித்தம் இரண்டாயிரம் பொலிஸார் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக காதிகாம பொலிஸ் பொறுப்பதிகாரி லக்சிறி சந்திமால் தெரிவித்தார்.

அதேபோல் 2 ஆயிரம் படையினரும் பாதுகாப்புச் சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### 4 பாடசாலைகளுக்கு விடுமுறை

காதிர்காமம் திருவிழாவுக்கு வருகை தரும் யாத்திரிகர்களின் பாதுகாப்பை முன்னிட்டு மேலதிக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் பொலிஸார் தங்குவதற்காக கதிர்காமம் பிரதேச சபைக்குட்பட்ட 4 பாடசாலைகள் சில தினங்கள் மூடப்படவுள்ளன. (அ)



வல்வெட்டித்துறை நேதாஜி சிறுவர்கழகத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவையொட்டி "நேதாஜி ஆண்டுமலர்" முதலாவது இதழ் அண்மையில் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் வல்வெட்டித்துறை நகராட்சிமன்றச் செயலாளர் கு.அமிர்தலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும் செல்வி.சாந்தி சாந்தலிங்கம், பிரதம விருந்தினராகக் காலந்துகொண்ட வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பி.கிருஷ்ணாநந்தன், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி க.மயிலேறும் பெருமாள் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## புனித மரியம்மை ஆலய புனரமைப்பு

தென்கோவை புனித மரியம்மை ஆலயப் புனரமைப்பு வேலைகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. கூரை புனரமைப்பு, முகப்பு மண்டபம் அமைத்தல் முதலிய திருப்பணிகள் தற்போது நடைபெற்ற வண்ணம் உள்ளன. திருப்பணி வேலைகள் யாவும் உள்ளூர், வெளியூர் அடியவர்களின் ஆதரவுடன் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## வலிகிழக்குப் பிரதேச பண்பாட்டு விழா

வலிகிழக்குப் பிரதேசப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 19ஆம், 20ஆம் திகதிகளில் பண்பாட்டு விழா நடாத்தப்படவுள்ளது. முதலாம் நாள் விழா பிரதேச செயலகத்தில் அமைக்கப்படும் ''சேனாதிராயா முதலியார்'' அரங்கிலும் இரண்டாம் நாள் விழா ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில் அமைக்கப்படும் சுவாமிகள் ஞானப்பிரகாசர் அரங்கிலும் இடம்பெறவுள்ளன.

முதல் நாள் நிகழ்வுகள் நீர்வேலி கந்தசாமி கோவிலில் இருந்து பண்பாட்டு ஊர்வலத் துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. வலி கிழக்கின் வளங்களைச் சித்திரிக்கும் ஊர்திப் பவனி சிறப்பம்சமாக நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வுகளில் காலை ஆய்வரங்கமும் மாலை பிரதேச மணவாசனையை வெளிப்படுத்தும் ''செம்புலம்'' மலர் வெளியீடு, மூத்த கலைஞர்களுக்கு கலைக்கோ விருது வழங்கல் முதலிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (அ)

## தையற்பயிற்சி நெறி

(காரைநகர்)

கூட்டுறவுச் சபையும் யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் இணைந்து கடந்த 24ஆம் திகதி காரைநகரில் மனையியல் தையற்பயிற்சிகளை ஆரம்பித்துவைத்தன.

க.ஏகாம்பரம் தலைமையில் இடம்பெற்ற தையற்பயிற்சி நெறியை காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் ஆரம்பித்து வைத்தார். இப்பயிற்சி நெறியில் 19 பிள்ளைகள் பயிற்சி பெறவுள்ளனர்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்க தலைவர் சு.சிவசுப்பிரமணியம், யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி வே.செல்வரத்தினம், மற்றும் காரை மத்தி கிராம உத்தியோகத் தர் இ.திருப்புகலூர்சிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-4)

## சதுரங்கச் சுற்றுப்போட்டி

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் தரம் 4,5,6,7 மாணவர்களுக்கிடையேயான சதுரங்கச் சுற்றுப் போட்டி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பெண்களுக்கு இம்மாதம் 12ஆம் திகதி சனி காலை 8.15 மணிக்கும், ஆண்களுக்கு 13ஆம் திகதி ஞாயிறு காலை 8.15 மணிக்கும் நடைபெறவுள்ளது.

இப் போட்டிகள் தனிநபர் போட்டியாக ஒரே தரத்திலுள்ளவர்களுக்கிடையே நடைபெறும் ஒவ்வொரு போட்டியாளரும் சதுரங்கப் பலகையைத் தம்முடன் எடுத்துவர வேண்டும் ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் 4 போட்டியாளர்கள் பதிவு செய்யப்படவேண்டும்.

போட்டிகள் சர்வதேச விதிகளுக்கமைவாக கல்வித் திணைக்களத்தின் சுற்று நிருபத்திற்கமைவாக மத்தியஸ்தர்களினால் தீர்ப்பளிக்கப் படும். ஒவ்வொரு தோல்வியாளரும் போட்டியில் இருந்து விலக வெற்றிபெற்றவர்கள் தொடர்ந்து விளையாடுவார்கள். (ஓ-19)

# இலக்கியப் பயிற்சிப்பட்டறை

(அல்வாய்)

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இலக்கியப் பயிற்சிப் பட்டறை நடாத்த யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

பாடசாலை மாணவரிடையே கலை இலக்கிய ஆர்வத்தினையும், ஆக்கத்திறமையினையும் விருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டு மாவட்டச் செயலகத்தினால் இலக்கிய பயிற்சிப்பட்டறை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி பட்டறைக்கு பிரதேச செயலக ரீதியாக, தமிழ் இலக்கியத்துறையில் எழுத்தாற்றல், படைப்பாற்றல் உள்ள மாணவர்கள் ஐவரின் பெயர் விபரங்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறு வேண்டப் பட்டது.

இவ் வகையில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இருந்து தெரிவானோர் விபரம் தரப்படுகின்றது.

1. சி.பிரசாந்-புற்றளை மகாவித்தியாலயம்.
2. சி.பிருந்தா-வட இந்து மகளிர் கல்லூரி.
3. ம.மிதுசா-மெதடிஸ்த பெண்கள் உ.த.பாடசாலை.
4. இ.மயூரி-சென்தோமஸ் றோ.க.த. பெண்கள் பாடசாலை.
5. ம.நிருசா-வட இந்து மகளிர் கல்லூரி. (ஓ)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டிலும் கூட்டுறவு தொழில் பயிற்சி நிலையத்தின் அனுசரணையுடன் 6 மாத மகளிர் சுயதொழில் பயிற்சிகளில் பங்குபற்றி பூரணப்படுத்திய மகளிருக்கான சான்றிதழ் வழங்கலும், மரக்கன்று வழங்கும் நிகழ்வும் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரிக்கு முன்பாகவுள்ள வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனத்தில் 4ஆம் திகதி மு.ப.10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாள் பிரதேச செயலர் வரதலிங்கம் றூபிணி, பால், பால் நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான இயக்கத்தின் இணைப்பாளர் திருமதி றஜனி சந்திரசேகரம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். ஓ-19

## கூட்டம்

வடக்கு மாகாண விளையாட்டுத்துறை உதவிப் பணிப்பாளர் அண்ணாத்துரை யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருப்பதை முன்னிட்டு யாழ்.மாவட்டச் செயலகத்தில் இன்று புதன்கிழமை பி.ப.3 மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது.

கூட்டத்திற்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலயங்களின் விளையாட்டு உதவிப் பணிப்பாளர்களையும் மற்றும் விளையாட்டுத் துறை ஆசிரிய ஆலோசகர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு யாழ்.மாவட்ட மேலதிகச்செயலாளர் ஆ.சிவசுவாமி கேட்டுக்கொள்கின்றார். (ஓ)



யாழ் செய்திகள்

## மனித மேம்பாட்டு செயலமர்வும் மாணிக்க வாசக சுவாமிகள் குருபூசையும்

(யாழ்ப்பாணம்)

யா/மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம், மாணவர்களின் கல்வி, பண்பாடு, கற்றல் மேம்பாடு, சமய ஒழுக்கம் மேன்மை பெறவும், பெற்றோர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் மனித மேம்பாட்டு செயலமர்வையும், மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசையையும்எதிர்வரும்4ஆம்திகதிவெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் திருமதி வ.வைகுந்தவாசன் தலைமையில் நடாத்தவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரையை மட்டுவில் கல்வத்து சிவாலய பிரதமகுரு சிவஸ்ரீ கி.பரமேஸ்வரக்குருக்கள் ஆசீர்வாதமும் ஆசியுரையும் வழங்கவுள்ளார்.

முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கோட்டக்கல்வி அலுவலரும் பிரதி திட்டமிடல் கல்விப் பணிப்பாளருமான நா.சத்தியநாதன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் சத்தியசேவா சமித்தி தலைவர் வைத்தியகலாநிதி ஆர்.கணேசமூர்த்தி, சாயி சேவையாளர் எஸ்.ஈஸ்வரலிங்கம், யாழ்.மாவட்ட யோகா போதனாசிரியர் வி.என்.சிவராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

அத்துடன் ''அவனருளாலே அவன்தாழ் வணங்கி'' எனும் பொருளில், சரசாலை சரஸ்வதி வித்தியாலய ஆசிரியர் சைவப்புலவர் குமாரசாமி சுமூகலிங்கம் சிறப்புரை வழங்கவுள்ளார். அத்துடன் சமய தீட்சை வைபவமும் நடைபெறும். (ஓ)

## திக்கரை முருகனே! தீர்த்தமாடி யருள்வாய்

**இன்று (2008 -07-02 புதன் திக்கரை முருகன் தீர்த்தோற்சவ விழா)**

திக்கரை முருகனே தீர்த்த மாடியருள்வாய்
திருவருள் பொலிந்திட தீர்த்த மாடியருள்வாய்
எத்திக்கும் தொழுதிட தீர்த்த மாடியருள்வாய்
ஏற்றதோர் தீர்வருள தீர்த்த மாடியருள்வாய்
நித்தம் படும் துயர் தீர்க்க தீர்த்த மாடியருள்வாய்
நிரந்தரமான தோர் தீர்வுக்காய் தீர்த்த மாடியருள்வாய்
சித்தம் மகிழ்ந்தாட தீர்த்த மாடியருள்வாய்
சிவனருள் மைந்தனே திக்கரையில் தீர்த்த மாடியருள்வாய்

*கே.புவனேஸ்வரன்*
*(களபூமி - காரைநகர்.)*

## நால்வர் தரிசனக் காட்சியும் திருமறை உபசார சமர்ப்பணமும்

சித்தன்கேணி தனுவோடைப்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத் தின் 3ஆம் திருவிழா நாளான இன்று புதன் கிழமை நால்வர் தரிசனக் காட்சியும், திருமுறை உபசார சமர்ப்பணமும் இடம்பெறவுள்ளது. (ஓ-17)

## மஹோற்சவம்

நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 19ஆம் திகதி சனிக்கிழமை தீர்த் தோற்சத்துடன் நிறைவுறவுள்ளது.

தினமும் மு.ப.10 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகும். மாலை 3.30 மணிக்கு பஜனையும் 4.30 மணிக்கு பூஜையும் இடம் பெற்று இரவு 6 மணிக்கு சுவாமி வீதியுலா வந்து 7 மணிக்கு திருவிழா நிறைவு பெறும். (ஓ)

## தபால் அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் இன்று

தபால் அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்று 2ஆம் திகதி புதன்கிழமை யாழ்.பிரதி தபால்மா அதிபர் திணைக் களத்தில் நடைபெறும் என வடமாகாண பிரதித் தபால்மா அதிபர் வி.குமரகுரு அறிவித்துள்ளார்.

இந்த நேர்முகப்பரீட்சை கொழும்பு தபால்மா அதிபர் அலுவலகத்திலேயே நடைபெறவிருந்தது. எனினும் போக்குவரத்து பிரச்சினை காரணமாக ப்ரீட்சார்த்திகளின் வேண்டுகோளிற்கு இணங்க யாழ்ப்பாணத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது.

போட்டிப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்ட 41 தபால் அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் முற்பகல் 9 மணிக்கு முன்னராக தபால்மா அதிபர் திணைக்களத்திற்கு சமூகம் தருமாறு வடமாகாண பிரதித் தபால்மா அதிபர் கேட்டுள்ளார். (அ-4)

## ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவையினால் வெளியிடப்படும் ஞானச்சுடர் ஆனிமாத இதழில் சந்நிதியான் ஆச்சிரமம் அன்னை துர்க்கா துரந்தரிக்கு தமது அஞ்சலியை சமர்ப்பித்துள்ளது.

கோப்பாய் சிவத்தின் ''தொடக்கும் தொந்தரவும்'' எனும் கட்டுரையில் எமது முன்னோரால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஆசாரங்கள் இன்று கைவிடப்பட்டுள்ளதையும், அவை உண்மையிலேயே கடைப்பிடிக் கப்படவேண்டியவையே என்பதை ஆதாரங்களுடன் விளக் கியுள்ளார் மேலும் அரிய பல ஆன்மீகக் கட்டு ரைகளைத் தாங்கி இதழ் வெளிவந்துள்ளது. (ஓ)

## நோயாளருக்கான யோகாசன வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தினால் கந்தர்மடம் குமாரசாமி வீதியிலுள்ள வேதாந்த மடத்தில் எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு சிவலிங்க யோககேந்திரா செயலாளர் சி.சோதிமூர்த்தி தலைமையில் நோயாளருக்கான யோகாசனவகுப்பின் புதிய பிரிவு ஆரம்ப மாகவுள்ளது.

இவ் வகுப்புகளில் வயது வேறுபாட்டின்றி ஆண், பெண் இருபாலரும் பங்குகொள்ளலாம் என்றும், நோயாளர்கள் தனித்தனியாககவனம் செலுத்தப்படுவர் என்றும், பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஓ)







அண்மையில் நடைபெற்ற தொல்புரம் மேற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்க மாதாந்தக் கூட்டத்தின் போது மானிப்பாய் இலங்கை வங்கி மேற்தர கிளை முகாமையாளர் எஸ்.இலட்சுமண சர்மா, தொல்புரம் மேற்கு கிராம உத்தியோகத்தர் எஸ்.கே.சிவலிங்கத்தினால் மலர்மாலை சூட்டி வரவேற்கப்படுவதையும், சங்கானை இலங்கை வங்கி முகாமையாளர் வி.ஸ்ரீஸ்கந்தவரோதயன் உரையாற்றுவதையும், கூட்டத்தில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# நோத் முதல் கோப்லவா வரை 24

## ஆங்கிலேயரும் கண்டியரசனும்

ஒல்லாந்தர் இலங்கைக் கரைநாடுகளைத்தாம் கைப்பற்றியதால் அவை தங்களுடையதென்றனர். ஆனால் இராசசிங்கன் ஒல்லாந்தர் தனக்கு உதவிக்குவந்த பாதுகாவலர் என்றே கூறினான். இருபக்கத்தாருக்கும் உள்ள உறவு வியாபாரத்தால் ஏற்பட்ட இணைப்புத்தானே.

வர்த்தகத்தை விரும்பிய ஒல்லாந்தர் சமாதானத்தையே விரும்பினர். அவர்கள் விரும்பிய கறுவா, பாக்கு, ஆகிய சரக்குகள் கண்டியரசனுக்கு சொந்தமான நிலங்களிலேயே அதிகமாக விளைந்தன. அன்றிச் சிலாபம், புத்தளம், கொட்டியாரம் ஆகிய துறைமுகங்கள் கண்டி மன்னனுக்குரியனவாகவே இருந்தன. ஆனால் திருகோணமலை, மட்டக்களப்பு, கல்பிட்டி ஆகிய துறைகள் ஒல்லாந்தர் பிடியில் இருந்தன. இந்த நிலையில் இருதிறத்தாரும் ஒருவரை ஒருவர் பகைக்கக் காரணங்கள் ஏற்பட்டன.

கண்டியை அரசாண்ட நாயக்க மன்னர் பரம்பரையின் முதலாவது மன்னன் ஸ்ரீ விஜய ராசசிங்கன். அவன் 1739 ஆம் ஆண்டு தொடக்கம் அரசாண்டான். அவன் திறமை

**மீன் பார்வை**

யுள்ள மன்னனாய் இருந்தது மாத்திரமன்றிப் பகைவரை அஞ்சாதவனாயும் இருந் தான். அவன் காலத்திலே ஒல்லாந்தரின் மிரட்டலுக்கு அவன் பணியவில்லை. அவன் தன் இரர்ச்சிய எல்லைகளை அகலிப்புச் செய்தும் ஒல்லாந்தர் செய்த மதமாற்றத்தைப் பொறாதும் இருந்தான்.

கண்டியரசனைப் பகைத்தல் ஆகாது என ஒல்லாந்தருக்கு மேலிடத்து ஆணை கிடைத்தமையால் அவர்கள் மன் னனை எதிர்க்காது இருந்தார்கள். இவ்வாறான வேளையிலே தான் 1761ஆம் ஆண்டில் கரைநாடுகளில் விவசாயிகள் சம்பந்தமாக ஒரு குழப்பம் ஏற்பட்டது. அதனை வாய்ப்பாகக்கொண்டு கண்டியரசன் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன், கரை நாடுகள் மீது படை எடுத்தான். ஒல்லாந்தர் கண்டிப் படைகளைத் தீவிரமாக எதிர்த்தபோது கண்டியரசன் ஆங்கிலேயரின் உதவியை நாடினான். அது நிற்க.

றோபேட் நொக்ஸ் என்ற ஆங்கிலேயன் 18 வயதுச் சிறுவனாய் இருந்த காலத்தில் இராசசிங்கனுடைய அரண்மனையில் இருத்தப்பட்டான். அவன் அங்கே 20 ஆண்டுகளுக்கு அதிகமாக உறைந்து கண்டியைப் பற்றி எழுதியுள்ளான். இந்த இராச்சியம் 21 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் பெரும் பிரிவுகள் திசாவனிகள் எனவும் சிறு பிரிவுகள் ரட்டைகள் எனவும் அழைக்கப்படும். பெரும் பிரிவுகள் பன்னிரெண்டை திசாவைகள் பரிபாலிப்பார். சிறு பிரிவுகள் ஒன்பதையும் றட்ட மகாத் மயா என்ற தலைவர்கள் கண்காணிப்பர். கண்டியரசன் அளப்பரிய அதிகாரம் உள்ளவன்.

கண்டி மன்னர் பொதுவாகப் பிடிவாதக் குணம் உள்ளவர் அவர்கள் விடாக் கண்டர்கள். அரசனுக்கு உதவியாக உதகம்பக, பல்ல



கம் பக என இரு அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நீதி பரிபாலனம் புரியவும் திறைகளைத் திரட்டவும் படைகளை நடத்தவும் அதிகாரமும் உரிமையும் உண்டு.

**க.சி.குலரத்தினம்**


அவர்களுக்குக் கீழே உள்ள திசாவை முதலிய உத்தியோகத்தர் தத்தம் பிரிவுகளில் படை நடத் துதல் முதலிய பணிகளைச் செய்வர். கண்டி யரசின் பரிபாலன அலுவல் கள் பல உத்தியோ கத்தரால் திறம்பட நடத்தப்படுகின்றன என்பன நொக்ஸ் எழுதிய வாசகங்கள்.

(தொடரும்)



வடமராட்சி கப்பூது நுணுப்பாவளை முருகன் ஆலய பூங்காவனத்திருவிழாவின் போது முருகப்பெருமான் முத்துச்சப்பறத்தில் வீதி உலா வருவதையும், பூங்காவனத்திருவிழாவின் போது தவில் கச்சேரி நடாத்திய 8 வயதையுடைய இராமநாதன் சிவசாகித்தியனுக்கு ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ எஸ்.சுப்பிரமணியக்குருக்கள் பொன்னாடை போர்த்த, வர்த்தகர் எஸ்.ஸ்ரீகாந்தன் "நவநாத இளவரசன்" பட்டம் சூட்டுவதையும் படங்களில் காணலாம்.

(பரு.நிருபர்)



அண்மையில் நடைபெற்ற சைவபரிபாலனசபை முன்பள்ளி விளையாட்டுப்போட்டியில் விநோத உடையில் பங்குபற்றிய மாணவர்களையும் நிர்வாகிகளையும் படத்தில் காணலாம்.

# 47-வது ஆண்டில் மக்கள் வங்கி




(நேற்றைய தொடர்ச்சி)

திரவப் பணத்திற்கு தட்டுப்பாடு நிலவும் போதும், திடீரென A9 பாதை மூடப்பட்ட சந்தர்ப்பத்திலும் வாடிக்கையாளருக்கான பணக் கொடுப்பனவை மக்கள் வங்கி மட்டுப்படுத்தி இருக்கவில்லை என்பதனையும் மக்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

**நடைமுறைக் கணக்குகள்**
**Current Accounts**

மக்கள் வங்கி ஒரு வர்த்தக வங்கி. இது ஒரு அரச வங்கியும் ஆகும். வர்த்தக வங்கி எனப்படுவது பெருமளவில் காசோலைகளை பயன்படுத்தும் நடைமுறைக் கணக்குகளை கொண்டிருப்பது ஆகும். இது வர்த்தக செயற்பாடுகளுக்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கும் முதுகெலும்பு போன்றதாகும். வாத்தகர்கள் தமது பல்வேறு வியாபார நடவடிக்கைகளுக்கும் வங்கிச் செயற்பாடுகளில தங்கியிருக்க வேண்டும்.

வர்த்தகர்கள் நடைமுறை கணக்குகளை வங்கியில் திறப்பதனால் பெருமளவிலான பணப்புழக்கம் தவிர்க்கப்பட்டு காசோலைப் புழக்கம் அதிகரிக்கின்றது. பணத்தை கணக்கடுவதும் எண்ணிக் கொண்டிருப்பதும் சிரமமான காரியம். தவிர அதனை பெருமளவில் வைத்திருப்பதும் கொண்டு செல்லுவதும் பாது காப்பு அற்றது. எனவேதான் வியாபார வாடிக்கையாளர்கள் நடைமுறைக் கணக்குகளை திறப்பதுடன் காசோலைகளையும் அதிகம் பயன்படுத்துகின்றனர். எவ்வளவு பெருந்தொகை பணத்தை வழங்க வேண்டி இருப்பினும் அதனை ஒரு மூடையாக கட்டி கையளிப்பதற்கு பதிலாக ஒரு தபாலுறையில் வைக்கத்தக்க காசோலையாக வழங்கி விடுதல் சுலபமானது. இப்போது முன்னேறி விட்ட் மேலை நாடுகளைப் போல இங்கும் சிறுசிறு வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள்கூட நடைமுறைக் கணக்குகளில் ஆர்வம் காட்டி வருவது வரவேற்கத்தக்கது.

இன்று நாட்டில் நிலவும் காசோலைப் புழக்கதை முழுவதும் பணமாகப் பரிமாற நினைத தால் பணத்தை கொண்டுசெல்ல தினமும் ஆயிரக்கணக்கான லொறிகள் தேவைபபடும்.

**சேமிப்புக் கணக்குகள்**
**SavingsAccounts**

ஒரு அரச வங்கி என்ற முறையில் இங்கு வைப்பில் இடப்படும் பணத்திற்கு அரச உத்தரவாதம் கிடைக்கிறது. இதனை பாதுகாப்பான ஒரு நிலமை என்றே மக்கள் கருதுகிறார்கள்.

மேலும் மக்களுக்கு வங்கி என்றதும் நினைவுக்கு வருவது பணமும் சேமிப்புப் பழக்கமும் என்றால் மிகையாகாது. வங்கியில் சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பிப்பது ஒன்றும் பெரிய வேலை இல்லை. இது மிகவும் சுலபமானது. ஒருவர் தனது பல்வேறு தேவைகளுக்கென வேறுவேறாக எத்தனை கணக்குகளையும் ஆரம்பிக்கலாம்.

வங்கியில் பல்வேறு வயதினருக்கும் ரகத்தினருக்கும் உச்சப் பயனை தரும் வகையில் பல விதமான சேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அவை அவரவா தேவைக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டு உள்ளன. அவையாவன சாதாரண சேமிப்பு, குழந்தைகள் சேமிப்பு - இசுரு உதான, மாணவா மலர்ச்சி கணக்கு - சிசு உதான, புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடை வோருக்கான புலமைப் பரிசில் கணக்குகள், இளையோருக்கான YES Future Star, மகளிருக்கான வனிதா வாசனா, முதியோருக்கான யாத்திரைக் கணக்குகள் - பரிணத, மக்களுக்கான வெற்றிக் கணக்கு - ஜன ஜய, விவசாயிகளுக்கான அறுவடை கண்க்குகள், எனப் பலவாகும். இவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

மக்கள் வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிப்பது மிகவும் சுலபமானதும் பாதுகாப்பானதும ஆகும். எவரும் தயக்கமின்றி வங்கிக்கு வருகை தநது அலுவலர்களுடன் இன்முகத்துடன் கலந்துரையாடி கணக்கொன்றை ஆரம்பிக்கலாம். வங்கிக்கு வரும்போது தவறாது உங்கள் தேசிய அடையாள அட்டையையும் ஏற்கெனவே உள்ள வங்கிப் புத்தகங்களையும் எடுத்து வருவது சிறந்தது.

வங்கியில் வழங்கப்படும் படிவங்களையும் அவற்றில் உள்ள கேள்விகளையும் இட்டு எவரும் அச்சமடையத் தேவையில்லை. எதிர்காலத்தில் உங்கள் கணக்குகளை ஆரோக்கியமாக வழிநடத்தவே அவை துணை நிற்கும்.

சேமிப்புக் கணக்குகளில் பொதுவாக காசோலை வைப்புக்கள் ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை. விசேட கொடுப்பனவுகள் மற்றும் சம்பளக் காசோலைகள் முகாமையாளரின் அனுமதியுடன் ஏற்றுக் கொள்ளப் படலாம்.

சாதாரண சேமிப்பு கணக்குகள் - ஒரு வாடிக்கையாளர் தனது தேவைக்கென சேமிக்கவும் தேவைப்படும்போது மீளப் பெறவும் இக் கணக்கை ஆரம்பிக்கலாம். இக். கணக்கில் நிலையாக தொடர்ச்சியாக உள்ள பணத்திற்கு வருடாந்தம் வட்டி வழங கப் படுகிறது. இக் கணக்குகள் சம்பள காசோலைகளை வரவு வைக்கவும் சுனாமி மற்றும் அரச நிவாரண கொடுப்பனவுகள் மற்றும் வீட்டுத் திட்டம் போன்ற பல தேவைகளுக்கும் துணையாக நிற்கின்றன.

தேவை முடிந்ததும் கணக்கை மூடுவதனால் எதிர்கால வாய்ப்புக்கள் கைநழுவிப் போகின்றன. எனவே எப்போதும் அக் கணக்குகளில் மீதி அதிகரித்துச் செல் லும் வகையில் சேமிக்கப் பழக வேண்டும். உங்கள் வங்கிச் சேமிப்பு கணக்கொன்றில் உள்ள பணம எப்பொழுதும் உங்களுக்கே சொந்தமானது. அதில் வேறெந்த நிறுவனமும் ஆடகளும் உரிமை கொண்டாட முடியாது.

வீட்டில் ஒவ்வொருவருக்கும் ஒரு வங்கிச் சேமிப்புப் புத்தகம் இருப்பது மிகவும் சிறந்தது. ஒவ்வொரு முறையும் செலவு செய்யும் போது இந்தச் செலவு அவசியம் தானா என சற்று சிந்தித்து செலவினை குறைத்து சேமிக்கப் பழகுவது மிகவும் சறந்தது. தமது வருமானத்திற்கு ஏற்ப ஒவ்வொருவரும் ஒரு பங்கை வராத வருமானமாக கருதி அல்லது செலவு செய்து விட்ட பங்காக கருதி வங்கிச் சேமிப்பில் இட்டுவரல் வேண்டும். வங்கிக்கு சேமிக்க வரும்போது வட்டிக் கணக்கு பார்க்கும் பலர் தாம் வீண் செலவு செய்யும் தொகைக்கு முதலும் இழகப் படுவதை கருத்தில் எடுப்பது இல்லை.

**குழந்தைகளுக்கான சேமிப்பு -**
**இசுரு உதான.**

தனது கருவில் வளரும் குழந்தைக்கு ஒரு தாய் அழகாக சட்டைகளை தைத்து பேணத் தொடங்குகிறாள். கற்பனைகளில் கோட்டை கட்டுகிறாள். அவளது எதிர்பார்ப்புகள் எல்லை இல்லாதவை.

அந்தக் குழந்தை பிறந்ததும் எல்லையில்லா மகிழ்ச்சியில் அவள் திளைக்கும் தருணத்தில் அதன் எதிர்காலம் பற்றிய ஏக்கங்களும் மனதில் முளைவிடத் தொடங்குகின்றன.

உங்கள் குழந்தைக்கான சேமிப்புக் கணகதினை மக்கள் வங்கி தனது அன்பளிப்புத் தொகையின்ன வைப்பில் இட்டு ஆரம்பித்துத் தரும். குழந்தை பிறக்கும் வைத்திய சாலையிலோ உங்கள் வீட்டிற்கு வரும் மருத்துவ தாதியிடமோ இது பற்றிய விபரங்களை நீங்கள் கேட்டு அறியலாம். தவிர வங்கிக் கிளைக்கு நேரடியாக வருகை தருவதன் மூலமாகவும் கணக்கினைப் பெற்றுக் கொள்ளலாம். இப்போது பிறக்கும் குழநதைக்கு மட்டுமல்ல உங்கள் வீட்டில் இருககும் 5 வயதிற்கு உட்பட்ட ஒவ்வொரு குழநதைக்கும் ஒரு சேமிப்புக் கணக்கை அனபளிப்பாக ஆரம்பித்து தர மக்கள் வங்கி தயாராக இருக்கின்றது.

இவ்வாறு உங்கள் குழந்தைக்காக இன்று நாம் ஆரம்பித்துத் தரும் கணக்கு ஆயுட் காலம வரை நிலைத்து பல்வேறு பரிணா மங்களூடாக பிள்ளையின் எதிர்கர்லம் பற்றிய உஙகள் கனவினைப் போலவே வளர்ச்சி காண வேண்டும் என்பதே எமது பேரவா! குழந்தைகளின் சேமிப்புக் கணக்குகளுக்கு சாதாரண சேமிப்புக் கணக்கு களைவிட வட்டி அதிகமாகும். அது மட்டு மன்றி இச் சேமிப்புக்களுக்கு மாதாந்தம் வட்டி வழங்கப்படுகின்றது. எனவே முந்திய மாதத்தின் வட்டிக்கும் அடுத்த மாதம வட்டி கிடைக்கிறது.

(தொடரும்)

# அடிப்படைத் தேவைகள் / பிரச்சினைகளைத் தீர்க்காமல் எந்தவொரு கல்விச் சீர்திருத்தமும் வெற்றியடையாது

## இன்றைய கல்வி முறைமையில் சமூகப் பொருளாதார ரீதியாக பின்தங்கிய கிராமப்புறப் பாடசாலைகளின் நிலை




கல்வி குறைந்த அடைவின் மீது மிகச் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் வறுமையில் நிலைத்திருக்கும் வரையறைகளேயாகும். சமூகப் பொருளாதார அமைப்புகளினதும் நிலைகளினதும் மீது அடிப்படையாக்கப்பட்ட தற்போதைய கல்விமுறைகள் அதே சமூக பொருளாதார அமைப்பு நிலைகளை நிலைத்திருக்கவும், வலியுறுத்தவும், மீளாக்கவும் செய்கின்றது என்பதே உண்மையாகும்.

வசதிகுறைந்த பாடசாலைகள் சக்தியற்ற சமூகப் பொருளாதார பின்னணியைப் பிரதி பலிப்பதோடு அச்சக்தியற்ற சமூகப் பொருளாதார நிலையை நிலைத்திருக்கவும் செய்கிறது. உண் மையில் இங்கு பாடசாலைக்கு செல்லுதல் கூட சமூக வகுப்பு முறையை மீளவளம் பெறச் செய்வதாக அமைகிறது. "மௌன கலாசாரமும்", "வறுமை கலாசாரமும்" வசதிகுறைந்த பாடசாலைகளின் உண்மையான நிலைப்பாடுகளாகும். பாடசாலையை விட்டுச் செல்வோர் இருந்த போதிலும் பாடசாலையில் ஆரம்ப வகுப்புகளில் இருப்போர் அத்தியாவசிய திறன்களில் எதிர்பார்த்த குறைந்த தரத்தை அடைவதில் அதிகரித்த சித்தியின்மையைக் காட்டுகின்றனர். இவை பயனுடைய சமூகப் பொருளாதார மனிதனாக எந்தவொருவரும் தொழிற்படுவதற்குத் தேவையான அடிப்படைத்திறன்களாகும்.

இந்நிலைகளுக்கு பங்களிப்புச் செய்கின்ற காரணிகள் அநேகமானவை. அவற்றுள் முக்கியமானவற்றை விரிவாக ஆராய வேண்டியுள்ளது.

**அடிப்படைத் தேவைகள் இல்லாமை:**

பௌதீக வசதிகள், கட்டிடங்கள், சமூகத்தலைமைத்துவம், வருமானத்திற்



கான மூலங்கள் ஆகியவற்றின் குறைபாடுகள் இச்சூழல்களின் அடிப்படைப் பணுபுகளில் சிலவாகும். இதன்வாயிலாக இச்சூழலிலுள்ள பாடசாலைகள் ஆசிரியர், மேற்பார்வை, வழிகாட்டல், உதவிச் சேவைகள், பெற்றோரின் பங்களிப்பு ஆகியவற்றின் பற்றாக் குறைவினால் பாதிக்கப்படுகின்றன. சமூகத்துவ தலைமைத்துவக் குறைபாடும் இந்நிலையை இன்னும் உக்கிரப்படுத்துகிறது. இவ்வாறான சூழலில் பிள்ளைகளுக்கு ஊக்குவிப்பு கிடைக் கப்படுவதில்லை. அறியாமையும், கீழ் ஆர்வமும் பிள்ளைகளை பாடசாலையிலிருந்து வெளியே கொண்டு வர பெற்றோரைத் தூண்டுகின்றன. வறுமை காரணமாக பிழைத்திருத்தலுக்காக பிள்ளைகளைக் கூடுதலாக வேலையில் ஈடுபடுத்துவதே இதன் போக்காக அமைகிறது. அவர்களது இல்லங்களில் முறைசார் கற்றலுககும், பயிற்சிக்குமான பாரம்பரியங்கள் இல்லை. பெற்றோரும் போதிய எழுத்தறிவின்மையாலோ, ஆர்வமின்மையாலோ தமது பிள்ளைகளின் முறைசார் கற்றலில் உதவி புரிவதில்லை.

### பிள்ளையின் இயல்பு

ஒவ்வொரு பிள்ளைக்கும் இயற்கைச் சூழல், நுண்ணறிவு, இயக்கத்திறன்கள் ஆகியன வரமாகக் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும் சூழல் உள்ளார்ந்த சக்திகளை விருத்தி செய்வதற்கு சம அளவில் சேவை புரிவதில்லை.

வசதியற்ற சூழல்களில் பிறந்தோர் உள்ளார்ந்த சக்திகளை விருத்தி செய்து கொள்ளலையும் இழக்கின்றனர்.

வசதி குறைந்த பகுதியிலுள்ள பிள்ளை போசாக்குக் குறைவும், பல வீனமும், நோய்வாய்ப்பட்டும் இருப்பதோடு தாழ்வையன்றி ஊக்குவிப்பை அனுபவிப்பதில்லை. சில பாடசாலைகளிலுள்ள பிள்ளைகள் தரம் 1 இல் உள்ளவர்களா தரம் 6 இல் உள்ளவர்களா என இனங்காணமுடியாதவாறு குறை வளர்ச்சியிலுள்ளனர். பிள்ளை கல்வியில் பங்கு பற்றலும் ஒழுங்கற்றதாக உள்ளது. இது பிள்ளையை மந்தமாகவும், பின்தங்கியவனாகவும் ஆக்குவதற்கான முதன்மைக் காரணிகளாக இருக்கின்றன. இப்பாடசாலைகளுள் அநேகமானவற்றுள் பிள்ளைகள் கல்வியில் எந்த அக்கறையும் காட்டாமல் அவர்களது வறிய சமூகப் பொருளாதார நிலையின் காரணமாக விருப்புக் குறைவுடன் கண்டபடி வந்து போய்க் கொண்டு இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

முறைசார் பாடசாலைக்குப் புகுநிலையிலும் கூட பிள்ளை உடல் ரீதியாக போசாக்கின்றி இருப்பதுடன் அப்பிள்ளைக்கு போசாக்களிக்கும் பொறுப்பை நலன்புரிவோர் மேற்சுமத்தப்படுகிறது. நிறையுணவு குறைபாட்டினால் ஏற்பட்ட போசாக்கின்மையோடு கல்வி முறைமையும் போசாக்கின்றி இருப்பதாகவே கருத வேண்டியுள்ளது


### பாடசாலை

சமூகத்தின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்கான அரச நிறுவனம் பாடசாலையாகும். குறித்த காலத்தினுள் ஒவ்வொரு பிள்ளைக்கும் அடிப்படைத் திறன்களை வழங்கும் பொறுப்பு பாடசாலைக்குரியதாகும். குறைவசதியுள்ள சூழலும் அங்கு வாழும் பிள்ளைகளின் இயல்பும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டால் வசதியுள்ள சமூகத்தை விட கூடிய பொறுப்பை ஏற்கவேண்டிவரும். இக்காரணிகள் உண்மையாக விளங்கிக் கொள்ளப்பட்டு அரசு கவனமெடுக்குமாயின்ஏனைய பகுதிகளிலுள்ள பிள்ளைகள் வரமுடியும்.

எனினும், உண்மைநிலை கவலைக்குரியது. இப்பிள்ளைகள் ஆசிரியர், புத்தகங்கள், துணைச்சாதனங்கள், கற்றல் உதவிச்சாதனங்கள் ஆகியவற்றின் குறைபாட்டால் அவதிப்படுகிறார்கள். இப்பாடசாலைகளில் குறிப்பிடத்தக்க ஆசிரியர் பற்றாக்குறை இல்லாதிருப்பினும் இப் பாடசாலைகளில் நீண்டகாலம் சேவை செய்ய ஆசிரியர்கள் விரும்புவதில்லை என்பது கவனிக்கத்தக்கது. கற்பித்தல் முறைமை வளமற்றவையாக இருப்பதுடன் புத்தூக்கங்கள் முயற்சிக்கப்படுவதில்லை. மேற்பார்வையும் மிகக் குறைவு. அப்படியிருந்தாலும் நிர்வாகம் தொடர்பாக மட்டுமே நடைபெறுகின்றது.

### பாடவிதானம்

இன்னும் தான் பாடவிதாணங்கள், பாட நூல்கள், ஆசிரியர் வழிகாட்டிகள் ஆகியன குறித்த காலத்தினுள் பாடசாலையில் இருக்கும் எல்லோரினதும் திறனை பயனளிக்கும் வகையில் விருத்தி செய்வதற்காக முன்னேற்றமடையவில்லை.



உண்மையில் குறைவசதியுள்ள பாடசாலைகளில் உள்ளோரில் கூடிய விகிதத்தினர் தேவையான மிக்க குறைந்த தேர்ச்சியை அடைய முடியாதென்பதைக் காட்டுவதற்குப் போதியளவு சாட்சியங்கள் காணப்படுகின்றன.

கல்விசார்ந்த திறன்கள் இனங்காணப்பட்டு பாடவிதான அபிவிருத்தி நிலையத்தினால் வெளியிடப்படுகின்ற ஆசிரியர் வழிகாட்டிகளில் கூறப்பட்டுள்ளன. எனினும் இத்திட்டத்தை அமுலாக்கலில் இடைவெளியொன்றிருப்பதாக காணப்படுகிறது. மேலும் பாடசாலையில் இடை

**தம்பியப்பா காங்கேசபிள்ளை**
அதிபர்,
பலாலி ஆசிரியர்
கலாசாலை

யில் விட்டுச் செல்வதற்கோ, ஆரம்பக் கல்விச் சுற்றைவிட்டுச் செல்வதற்கோ முன்னர் அடிப்படைத்திறன்களை ஒவ்வொரு பிள்ளையும் அடைவதை உறுதிப்படுத்தும் விதத்தில் ஆரம்பப் பாடசாலைகளில் மாணவர் மதிப்பீடு திறன் சார்ந்ததாக இல்லை. ஆரம்பப் பாடசாலைகளுக்கான பாடவிதானம் அறிமுகப் படுத்தப்பட்டபோதிலும் மாற்றங்கள் முழுமையாக அமுலாக் கப்படவில்லை எனலாம். மேலும் இம்மாற் றங்களின் சிந்தனைகளையும், நோக்கங்களையும் விளங்கிக்கொள்ள வேண்டும். பொருத்தமான கற்பித்தல் முறைகளும் முறையாக ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை எனலாம். முயற்சகள் எடுக்கப்படுகின்றன.

ஆனால் முழுமையாக பயனளிக்கவில்லை. எனினும் காலத்துடன் கற்பித்தல் முறையியல் முன்னேற்றம் அடைந்துள்ளது. அது குறைவசதியுள்ள சூழலிலுள்ள பிள்ளைகளைச் சென்றடையவில்லை. உண்மையில் குறைவசதியுள்ள சூழலிலுள்ள பிள்ளைகளுக்குப் பொருத்தமானவாறு முறையியலும் மாற வேண்டும்.

அடைவுமட்டங்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமெனின் கற்பித்தல் முறையியலுக்கும் உரிய வலியுறுத்தல் வழங்கப்படவேண்டும். ஆனால் ஆசிரியர்களுக்கு அடிப்படைக் கற்பித்தல் சாதனங்களைத் தயாரிக்கக்கூடிய விருப்பும் ஆற்றலும் உண்டாயினும் அவற்றைக் களஞ்சியப்படுத்தக்கூடிய வசதியின்மையும் அவர்கள் அவற்றைத் தயாரிப்பதில் மேலும் எந்த முயற்சியும் எடுக்க விருப்புக் காட்டுவதில்லை.

### உதவிச்சேவைகள்

குறைவசதியுள்ள பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு பாடங்கள் சார்பான எண்ணக்கருக்களின் அமைப்பை இலகுவாக்குவதற்குரிய துணைச்செயல் நூல்களோ, கற்பித்தல் உதவிச்சாதனங்களோ பெரும்பாலும் கிடைப்பதில்லை. அவர்களுக்கு நூலகங்கள், புதினப்பத்திரிகைகள், சிறுவர் சஞ்சிகைகள் ஆகியன கிடைப்பதற்கான வழிகள் இல்லை. இதனால் அவர்கள் வாசிக்கும் திறனைப் பெறுவதற்கு தடையாக உள்ளது.

பிள்ளைகளின் வாசிப்புடன் ஒப்பிடுகையில் எழுதுவதில் ஓரளவு திறமையைக் காட்டுகின்றனர். இதற்கு இரு காரணங்களை முன்வைக்கலாம். எழுத்து சுய வெளிப்பாட்டைக் காட்டக்கூடிய முறையொன்றாதலால் அதிகம் சாதனங்கள் இல்லாமலே திருப்தி செய்ய முடியும். உதாரணமாக், பிள்ளைகள் வீட்டுச் சுவர்களிலும், மணலிலும், கற்பலகைகளிலும் எழுதுவது சாதாரண வழக்கமாகும். அங்கு அவர்கள் பேனா, பென்சில், கரித்துண்டு, கோல்கள் போன்ற வற்றால் எழுதுகிறார்கள். உண்மையில் விரல்களின் நுண் தசைகளைப் பயிற்றும் இயற்கையான விருப்பு பிள்ளையின் தேவைகளில் ஒன்றாகும். எனவே வசதி குறைநத சூழலால் எழுத்துத் திறன் வெகுவாகப் பாதிக்கப்படமாட்டாது. ஆனால் வாசிப்புத திறன் வாசிப்பு சாதனங்கள் இருந்தால் மட்டுமே வளர்ச்சியடையும். பொருத்தமான சாதனங்கள் கிடைக்கப்பெறாமை வாசிப்புத் திறன்களை விருத்தி செய்வதற்குப் பெரும் தடையாக உள்ளது. குறைவசதியுள்ள பாடசாலைகளிலுள்ள பிள்ளைகள் வாசிப்பதற்கான துணைச் சாதனங்கள் இல்லாத வர்களாக இருப்பதுடன் அப்படி ஏதும் கிடைக்கப் பெற்றாலும் அது பிள்ளைக்குப் பொருத்தமானதாக இருக்காது. உதாரணமாக தரம் 2 இல் படிக்கும் பிள்ளைக்கு புதினப் பத்திரிகை வாசித்தல் என்பது சொற்களையும், வசனங்களையும் வாசித்தல். ஒரே எழுத்துக்களாலான வித்தியாசமான சொற்களை வாசித்தல் எனப் பொருள் படும். இவ்வாறு வாசிப்பு எழுத்துக்களை விட மிகச்சிக்கலான பணியாகும்.

எனவேதான், எழுதும் ஆற்றலைவிட வாசிக்கும் ஆற்றலில் குறைவடைவு பொதுவாகக் காணப்படுகிறது.

அநேகமாக ஆசிரியர்களுக்கு ஆரம்பப் பாடசாலைகளில் மொழி கற்பித்தலுக்கான போதியளவு பயிற்சி வழங்கப் படுவதாக தெரியவில்லை. மிகச் சாதாரணமாகக் கருதப்படும் மொழி கற்பிக்கும் முறையானது பாடநூலில் இருந்து உரத்து வாசித்தலும் மனனம் செய்தலுமாகிய பாரம்பரிய முறைகளேயாகும். இது ஆய்வாளர்களினால் அவதானிக்கப்பட்டதொன்றாகும். எனவே குறைவசதியுள்ள ஆரம்பப் பாடசாலைகளில் மொழி கற்பித்தலுக்கான புத்தூக்க முறைகள் விருத்தி செய்யப்பட வேண்டிய தொன்றாகும்.

இப்பாடசாலைகளில் பாடநூல்களை விட செயல்நூல்கள் கூடிய செயல் முறைப் பெறுமானம் உள்ளதாக இருக்கும். இது செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தல் முறைகளுடன் நெருக்கமாக இணைந்திருத்தல் வேண்டும். இது கற்பித்தல் முறையிலுள்ள வாய்மொழி ஊடகத்தின் மேல் உள்ள பெரும் செறிவை நீக்கிவிடும். செயல் நூல்கள் கற்பித்தல் முறையியலுக்கு வழிகாட்டியாகவும் உதவும்.

*(தொடரும்)*

> கரங்கள் சுத்தமாக இருக்கின்றனவா என்பதை கடவுள் பார்க்கிறார். நிறைவாக இருக்கின்றனவா -என்பதை அல்ல.
>
> -இங்கிலாந்து

**வலம்புரி**

# வடக்கிற்குத் துரத்தியவரே வடக்கின் ஆளுநர்

வடக்கு மாகாண ஆளுநராக ஓய்வு பெற்ற பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் பொதுவாக ஓய்வு பெற்ற படை அதிகாரிகளுக்கு நிர்வாகப் பதவிகள் வழங்கப்படுவது பாரம்பரியமான நிகழ்வாக அமைந்துள்ளது.

வெளிநாட்டுத் தூதுவர்களாக, ஆளுநர்களாக கூட்டுத்தாபனங்களின் தலைவர்களாக ஓய்வுபெற்ற படை அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர்.

அரச நிர்வாகம் செம்மையாக இயங்குவதற்கு இராணுவ ரீதியில் கட்டளையிட்டவர்கள் பொறுப்பாக இருந்தாலே பணியாளர்கள் தமது கடமைகளை நேர்த்தியாக செய்து முடிப்பார்கள் என்ற நினைப்பு அரசிற்கு இருக்கும்போல் தெரிகிறது.

துவக்கை தூக்கிய கை ஆகக் குறைந்தது கதிரையைத் தூக்கியாவது பணியாளர்களை- பொதுமக்களை தாக்க முற்பட்டால் அதுவே நிர்வாகத்தை சீராக நடத்தப்போதும் என்ற கருத்து அரசிடம் நிலைபேறு அடைந்துள்ளதென்பதை மாகாணங்களுக்கான ஆளுநர் நியமனங்களில் இருந்து தெரியவருகின்றது.

இவை எல்லாம் அரச சமாச்சாரம். இதில் நாம் மூக்கை நுழைத்து ஐயா, சாமி வேண்டாம் வீண் வம்பு என்று விட்டுவிடலாம்.

இதில் விதியும் -விசித்திரமும் என்னவெனில் ஓய்வு பெற்ற பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா வடக்கின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருப்பதாகும்.

ஓய்வு பெற்ற படை அதிகாரிகளை ஆளுநராக நியமிக்கும்போது விக்டர் பெரேராவை மட்டும் ஆளுநராக நியமித்தால் என்ன? என்ற கேள்வி எழலாம்.

இங்கு தான் அந்த விதியின் விளையாட்டு வேலை செய்கிறது.

விக்டர் பெரேரா பொலிஸ்மா அதிபராக கடமையாற்றியபோது தலைநகர் கொழும்பில் இருந்து வடக்கு கிழக்கு தமிழர்களை ஒரு இராப்பொழுதின் அதிகாலை வேளையில் உடுத்த உடையுடன் வயது, பால் வேறுபாடு இன்றி பஸ் வண்டியில் ஏற்றி அனுப்பி வைத்தார்.

ஐயா,நாங்கள் மருத்துவ சிகிச்சைக்காக வந்தவர்கள். எங்களை திருப்பி அனுப்பி விடாதீர்கள் என்று மன்றாடியபோதும் விக்டர் பெரேரா மனம் இரங்கவில்லை.

இது உயர் மட்டத்தின் உத்தரவு. என்னால் எதுவும் செய்ய முடியாது என்று பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டார்.

தலைநகரில் தங்கியிருந்த வடக்கு கிழக்கு தமிழ் மக்களை அநாகரிகமான முறையில் அனுப்பி வைத்த அந்த கனவான், இப்போது வடக்கு மாகாணத்தின் ஆளுநராக நியமனம் பெற்றுள்ளார்.

அட! நீங்க வேற, நான் வடக்கிற்கு ஆளுநராகப் போகின்றேன். அதற்கு முதல் நீங்கள் உங்கள் இருப்பிடத்திற்குப் போங்கள் என்று தான் பெரிய துரை அனுப்பினவர் என்ற உங்கள் முணுமுணுப்பும், மெல்லிய சிரிப்பும் தெரிந்தாலும், ஆளுநர் விக்டர் பெரேராவின் நிர்வாக நடைமுறை பொலிஸ்மா அதிபர் என்ற பழைய நினைப்பில் தான் அமையுமா? அல்லது புதிய பாதையா? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# பாதுகாப்பு தொடர்பில் சார்க் நாடுகள் எந்த வேண்டுகோளையும் விடுக்கவில்லை

## லக்ஷ்மன் குலுகல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாப் படையினர் இலங்கை வருவது தொடர்பில் இந்திய அரசாங்கத்தினால் உத்தியோக பூர்வமான வேண்டுகோள் எதுவும் இது வரை விடுக்கப்பட வில்லை எனவும் இந்தியப்படையினர் பிரசன்னம் ஆவதற்கு இலங்கை அனுமதி எதனையும் வழங்கவில்லை எனவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷமன் குலுகல்ல கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

சார்க்மாநாட்டின் பாதுகாப்புத் தொடர்பில் எந்தவொரு நாடும் இதுவரை உத்தியோக பூர்வமான வேண்டுகோள்கள் எதனையும் விடுக்கவில்லை என குறிப்பிட்டுள்ள் அவர் எந்தவொரு வெளிநாட்டு இராணுவ அதி காரிக்கும் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்பட வில்லை எனவும் தெரிவித் துள்ளார்.

இலங்கை அரசாங்கம் இது வரை எந்தவொரு வெளிநாட்டு இராணுவ அதிகாரியும் இலங்கைக்கு வந்ததாக கேள்விப்படவில்லை அதனால் எம்மால் உத்தியோக பூர்வமாக எதனையும் அறிவிக்க முடியாது இருக்கிறது. என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

இதேவேளை ஆப்கானிஸ்தான் படையினரும் சார்க மாநாட்டுக்கு வருகைதரும் அந்நாட்டு ஜனாதிபதி ஹமித் கர்சாயிக்கு பாதுகாப்பு வழங்கும் பொருட்டு இம் மாதம் இலங்கைக்கு வரவுள்ள அரசாங் க மட்ட தகவல்கள் தெரிவிப்பதாகவும் அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைப்படையினரால் இந்திய மற்றும் ஆப்கானிஸ்தான் தலைவர்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாது இருக்கும் என்பதால் இரு நாடுகளும் தத்தமது படையினரை பாதுகாப்பில் ஈடுபடுத்த தீர்மானித்திருப்பதாகவும் அந்த ஊடகம் அரசாங்கத் தகவல்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங்கின் பாதுகாப்புத் தொடர்பில் இந்தியா கூடுதல் கவனம் செலுத்தி உள்ளது. அன்மையில் இலங்கைக்கு இந்தியா உயர் மட்டக் குழுவினர் வருகைதந்தமைக்கான முக்கிய காரணமும் இதுவே இந்திய கறுப்புப் பூனைப்படையினரும் கடற் படை அதிகாரிகளும் இந்த மாதத்துக்குள் இலங்கைக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களுடன் ஆப்கானிஸ்தான் படைகளும் வரலாம் எனவும் அந்த ஊட கம் அரசாங்கத் தகவல் களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை. இணையத்தளம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்காரா இந்தியா மட்டும் அன்றி எல்லா நாட்டுத் தலைவர்களும் தத்தமது பாதுகாப்புப் படையினருடனேயே இலங்கை வருவார்கள் எனவும் அது வழமையாக நடை முறையிலுள்ள ஒரு விடயமே என்று குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் சார்க் மாநாட்டிற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் இலங்கைப் பாதுகாப்புப் படையினரைக் கொண்டே செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை 15ஆவது சார்க் மாநாடு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திலேயே நடைபெறவுள்ளதாக பெயர் குறிப்பிட விரும்பாத வெளிவிவ கார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகவும் அந்த கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

(அ)

# ஜே.வி.பியின் போராட்டத்திற்கு ஐ.தே.கட்சியும் ஆதரவு

## கயந்த கருணாதிலக

5ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்புக் கோரி ஜே.வி.பி. ஏற்பாடு செய்துள்ள ஒரு நாள் பொது வேலை நிறுத்தத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.

இருப்பினும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு ஏற்ப 7 ஆயிரத்து 500 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி வேண்டுகோள் விடுப்பதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதில கூறினார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொழிற்சங்கங்களுடனான சந்திப்பையடுத்து ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பினை வழங்கியுள்ளமை போதாது எனக் குறிப்பிட்ட அவர் 7ஆயிரம் 500 ரூபா சம்பள உயர்வு வழங்க முடியா விட்டால் அரசாங்கம் பாராளுமன்றத்தை கலைத்து விட்டு வீடு செல்ல வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை, கடந்த வாரம் கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்கு மாணவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டு தாக்குதல் நடாத்திய சம்பவத்தினை ஐக்கிய தேசியக்கட்சி வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## ஊழியர் கூட்டுறவு சிக்கன கடனுதவி சங்கம்

# நிர்வாகக் குழுவை அமைக்க தொடர்ந்தும் அரசாங்கம் தடை செய்தால் போராட்டம்

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

கல்விசார் துறைசார்ந்த ஊழியர் கூட்டுறவு சிக்கன கடனுதவிச் சங்கத்தின் நிர்வாகக் குழுவை அமைப்பதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் சதித்திட்டம் தீட்டினால் 1 இலட்சத்து 25ஆயிரம் அங்கத்தினர்களும் சந்தாப்பணம் செலுத்தாமை போராட்டத்தை ஆரம்பிக்க நேரிடும்.

தெற்காசியாவிலேயே மிகப் பெரிய இச்சங்கத்தை பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே மஹிந்த ஜயசிங்க இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறியதாவது,

ஒன்பது வருடங்களாக இக்கடனுதவி சங்கத்திற்காக நிர்வாக குழு தேர்தல் நடத்தப்படவில்லை .பின்னர் நாம் நீதி மன்றம் சென்றோம் நீதி மன்ற தீர்ப்பின் மூலம் மார்ச் மாதம் தேர்தல் நடத்தப்பட்டது.

இதில் எமது சங்கம் 198பிரதிநிதிகளை பெற்று வெற்றியீட்டியது ஏப்ரல் மாதம். நிர்வாக குழுவை அமைப்பதற்கு பொதுச் சபை கூடிய போது அரசாங்க சார்பான சுதந்திரக் கட்சி தொழிற்சங்கம் மாவட்ட நீதி மன்றத்திற்கு சென்று நிர்வாகக் குழுவை அமைப்பதற்கு இடைக் கால தடையுத்தரவை பெற்றுக்கொண்டது.

இது தொடர்பில் நாம் நீதிமன்றத்திடம் உண்மைகளை முன்வைத்தோம் பின்னர் அத்தடை நீக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் நிர்வாகக் குழுவை அமைக்க கூடிய போது அரச சார்பு தொழிற்சங்கம் இடைக் கால தடையுத்தரவை பெற்று தடுத்து நிறுத்தியது.

சட்டத்தை, நீதியை மதிக்கின்றோம். உண்மைகளை மறைத்து இவ்வாறான தடை யுத்தரவுகள் பெறப்படுகின்றன.

எமது சங்கம் இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது.

அவ்வழக்குத் தீர்ப்பின் மூலமே இப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்.

தெற்காசியாவிலேயே கல்வித் துறை சார் கடன் வழங்கும் பாரிய கூட்டுறவுச்சங்கம் இதுவாகும்.

நிர்வாகக் குழுவை அமைத்து சிறந்த முறையில் முன்னெடுக்கப் பட்டால் ஆசிரியர்கள் உட்பட கல்வித்துறை சார் அனைவருக்கும் நன்மையான பலாபலன்களை பெற்றுக்கொடுக்க முடியும். ஆனால் இதனை அர சாங்கமே தடுக்கின்றது. (அ)

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

ஓலைச் சுவடிகள் 54

**நம்பிக்கைகளும் ஆசாரங்களும்**

### இரவு உணவு ஏன் மிதமாக இருக்க வேண்டும்?

இரவு உணவு வயிறு நிரம்ப உண்டால் உடனே தூக்கம் வரும் என்றும் அதனால் இரவு மிதமாக உண்ணுவதே நன்று என முதியவர்கள் கூறுவதைக் கேட்டுள்ளோம்.

இரவு உணவுக்குப் பின் சிறிது தூரம் நட என்றும் கூறக்கேட்டிருக்கின்றோம். உண்ட உடன் படுக்கையில் விழுவோரை உத்தேசித்து தான் இவ்வாறு கூறப்படுகின்றது.

ஜீரணிக்க வாய்ப்பு குறைவானதால் இரவு மிதமாக உண்ண வேண்டும் என்பர். இரவு படுக்கும் முன் அருந்திய உணவு எளிதில் ஜீரணமாவதில்லை. இதைப் புரிந்து கொண்டவர்கள் இலேசான உணவு உண்கின்றனர்.

எப்போதும் இரவு வயிறு நிரம்ப உண்பவர்களில் வயிற்றுக் கோளாறுகளும் இதயம் சம்பந்தமான நோய்களும் எளிதில் வருவதற்கான வாய்ப்பு அதிகம் என்று அண்மையில் ஆராய்ச்சிகள் தெளிவாக்கியுள்ளன. மேலும் இரவு மிதமாக உண்பவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள் என்றும் கண்டறிந்துள்ளனர்.

# பத்திரிகை ஸ்தாபன திட்ட இணைப்பாளர் மீது வெள்ளைவானில் வந்தவர்கள் கடும் தாக்குதல்

(கொழும்பு)

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் திட்ட இணைப்பாளர் நாமல் பிரேராவும் பிரித்தானிய தூதரகத்தின் அரசியல் பிரிவு உத்தியோகத்தர் மகேந்தி ரத்னவீரவும் வெள்ளை வானில் வந்தவர்களின் கடத்தல் முயற்சியிலிருந்து மயிரிழையில் தப்பித்துள்ளனர். வெள்ளை வானில் வந்தவர்கள் இவர்கள் இருவரும் பயணித்த காரினை மறித்து இருவர் மீதும் கடும் தாக்குதல் நடத்தியதுடன் இவர்களை கடத்தவும் முயற்சித்துள்ளனர்.

கடத்தும் முயற்சியிலிருந்து தப்பித்த இருவரும் படுகாயம் அடைந்த நிலையில் கொழும்பில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடத்தல் முயற்சி மற்றும் தாக்குதல் சம்பவங்களை அறிந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வைத்தியசாலைக்கு சென்று நாமல் பெரேரா மற்றும் மகேந்திர ரத்னவீர ஆகியோரைச் சந்தித்து உரையாடியுள்ளார். இதன்போது ஊடக அமைச்சர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன எம்.பிக்களான ரவி கருணாநாயக்க மற்றும் தயாசிறி ஜயசேகர ஆகியோரும் வைத்தியசாலைக்கு சென்றிருந்தனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, கொழும்பு கிருள வீதியில் அமைந்திருக்கும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்திலிருந்து நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் அதன் திட்ட இணைப்பாளர் நாமல் பெரேரா அலுவல்கள் முடித்து வீடு செல்வதற்கு முற்பட்டுள்ளார். இவருடன் பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்தின் அரசியல் பிரிவு உத்தியோகத்தரான மகேந்திர ரத்னபிரியவும் உடன் இருந்துள்ளார். இதன்போது வாகனத்தை செலுத்துவதற்கென மகேந்திர ரத்னவீர முற்படும் வேளையில் வாகனம் நிறுத்தப்பட்டிருந்த இடத்திலிருந்து சுமார் 150 மீற்றர் தொலைவில் மோட்டார் சைக்கிள் சகிதம் இருவர் தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்துள்ளனர். இவர்கள் குறித்து சந்தேகம் அடைந்த நாமல் பெரேரா இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்துக்கு கையடக்க தொலைபேசியூடாக தகவல் கொடுத்துள்ளார். இதனையடுத்து நாமல் பெரேராவின் வாகனம் அலுவலகத்தை விட்டு சென்று கொண்டிருந்த சமயம் கிருளப்பனை பொல்ஹேன் கொடை சந்தியில் வைத்து வெள்ளை வான் ஒன்றில் வந்தவர்கள் நாமல் பெரேரா வின் வாகனத்தை மறித்துள்ளனர்.

**பொல்லுகள் சகிதம் 6 பேர் தாக்குதல்**

வானில் இருந்து பொல்லுகள் சகிதம் பாய்ந்த இனந்தெரியாத நபர்கள் ஆறுபேர் நாமல் பெரேராவின் வாகனத்தை சரமாரியாக தாக்கியதுடன் அவரை வாகனத்துக்குள் இருந்து வெளியில் இழுத்து எடுப்பதற்கு முயற்சித்துள்ளனர். இதேநேரம் வாகனத்தை செலுத்தி வந்த பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்தின் அரசியல் பிரிவு உத்தியோகத்தரான மகேந்திர ரத்னவீரவும் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார். இதன்போது நாமல் பெரேரா தனது இருக்கையை பற்றிப் பிடித்துக்கொண்டு பலத்த குரலில் சத்தமிட்டுள்ளார். இதனால் அவ்விடத்தில் பொதுமக்கள் கூடியதையடுத்து கடத்தல் காரர்களின் முயற்சி பலனளிக்காது போய்விட்டது.

**முன்னும் பின்னும் வெவ்வேறு இலக்கத்தகடுகள்**

இதேவேளை, கடத்தலுக்காக பயன்படுத்தப்பட்ட வெள்ளைநிறவானில் முன்பகுதியிலும் பின் பகுதியிலும் வெவ்வேறு இலக்கத் தகடுகளை கொண்டிருந்ததாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

பலத்த தாக்குதலுக்கு உட்பட்ட மேற்படி இருவரும் பொதுமக்களின் உதவியுடனேயே வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். நாமல் பெரேராவுக்கு இதற்கு முன்னர் பல தடவைகளில் பவ்வேறு அச்சுறுத்தல்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் அவர் கிருளப்பனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்ததாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இந்த நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஊடக அமைச்சர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, லக்ஷ்மன் யாப்பா, அபேவர்தன மற்றும் எம்பிக்களான ரவி கருணாநாயக்க, தயாசிறி ஜயசேகர ஆகியோரும் வைத்தியசாலைக்கு சென்றிருந்தனர் இதன்போது பிரித்தானிய உயர்ஸ்தானிகர் பீட்டர் ஹெய்ன்ஸும் வைத்தியசாலைக்கு வந்திருந்தார். (அ)

## இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் பாரிய இடையூறாக அமைந்துள்ளது கடற்படை உயர் அதிகாரி

(கொழும்பு)

இந்திய மீனவர்களின் அத்து மீறல்கள் பாதுகாப்பு நடவடிக்கைக்களை மேற்கொள்வதற்குப் பாரிய இடையூறாக அமைந்துள்ளதாக வடக்குப் பிராந்தியத்திற்குப்பொறுப்பான கடற்படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியக் கடற்படை வள்ளங்கள் ஒரே தடவையில் இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்து மீறிப் பிரவேசிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய மீனவர்களின் வள்ளங்களுக்குள் மறைந்திருந்து விடுதலைப் புலிகள் பல்வேறு பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயுதக் கொள்வனவு உணவுப் பொருட்கள் கடத்தல் போன்ற பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில சந்தர்ப்பங்களில் விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொள்ளும் போது பதில் தாக்குதல் மேற்கொள்ள முடியாத இக்கட்டான சூழ்நிலை இலங்கைக் கடற் படையினருக்கு ஏற்பட்டுள்ளதாக உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

(அ-5)

## சார்க் மாநாட்டுக்கான அழைப்பிதழ் பங்களாதேஷ் பிரதமரிடம் ரோஹித் கையளிப்பு

(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம பங்களாதேஷ் சென்றுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள சார்க் உச்சி மாநாட்டுக்கான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பிதழைகையளிப்பதற்காகவே அமைச்சர் அங்கு சென்றுள்ளார்.

இவ்விஜயத்தின் போது ஜனாதிபதியின் அழைப்பிதழை பங்களாதேஷின் பிரதம ஆலோசகர்டாக்டர்பக்றுதீன் அஹ்மதிடம் அமைச்சர் போகொல்லாகம கையளித்துள்ளார்.

அழைப்பிதலைப் பெற்றுக்கொண்ட பங்களாதேஷின் பிரதம ஆலோசகர் டாக்டர் பக்றுதீன் அஹ்மத் இம்மாநாட்டில் தான் நிச்சயம் கலந்துகொள்வதாக உறுதியளித்ததோடு மாநாடு வெற்றிகரமாக நடைபெறுவதற்கு தனது வாழ்த்துக்களையும் அமைச்சரிடம் தெரிவித்தார் எனவும் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

## இலங்கையின் பணவீக்கம் 28.2 சதவீதமாக உயர்வு

(கொழும்பு)

இலங்கையின் வருடாந்த பணவீக்கமானது 28.2வீதத்தை எட்டியுள்ளதாக நேற்று முன்தினம் வெளியான புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகவும் அதிகமான பணவீக்கம் இதுதான்.

உலகமெங்குமே பணவீக்கம் ஒரு பிரச்சினை தான் ஆனால் இலங்கை மற்றெந்த நாடுகளையும் விட மிக மோசமாக பாதிக்கப் பட்டுவிட்டது. நுகர்வுப் பொருட்களின் விலைகள் ஒரு ஆண்டுக்கு முன்னர் இருந்ததை விட சுமார் 30 சதவீதம் அதிகரித்து விட்டன.

இதற்கு உலக அளவில் எண்ணெய் விலைகள் உயர்ந்ததும் நாட்டில் எரிபொருட் களுக்கான மானியங்கள் குறைக்கப்பட்டதும்தான் காரணம் என்று கூறப்படுகிறது.

ஆனால் உண்மையில் பொருளாதாரம் தவறாக நிர்வகிக்கப்படுகிறது என்றும் அரசாங்கம் மிகவும் அதிகமாக செலவு செய்கிறது என்றும் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

எதிர்வரும் மாதங்களில் பணவீக்கம் நிலை சீராகும் என்று மத்திய வங்கி நம்பிக்கை தெரிவிக்கிறது. ஆனால் இதுபோன்ற நம்பிக்கைகள் இதற்குமுன்னாள்பலமுறைபொய்த்துப் போயுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)

## படையினர் வன்னிக்கு செல்வதற்கு முழுமையாக தோள் கொடுப்போம்

### விமல் வீரவன்ச எம்.பி.சூளுரை

(கொழும்பு)

விடுதலைப்புலி பயங்கரவாதத்தை தோல்வியடையச் செய்யும்படையினரின் நடவடிக்கைகளை வன்னிவரை வெற்றிகரமாக கொண்டு செல்லுவதற்கு முழுமையாக தோள் கொடுப்போம்.

அதனைவிடுத்து படையினரை கொழும்புக்கு கொண்டுவருவதற்கு இடமளிக்க மாட்டோம் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச எம்.பி. தெரிவித்தார்.

ஜே.வி.பி.யை மீண்டும் காட்டுக்குள் கொண்டு செல்லும் நடவடிக்கைகளை அதன் தலைவர்கள் மீண்டும் முன்னெடுக்கின்றனர் என்பதுடன் ஜே.வி.பி. இன்று புலிகளுக்கு சார்புத் தன்மையான வியூகங்களை முன்னெடுப்பதோடு ரணில் விக்கி ரமசிங்கவின் ஜூனியர் அணியாக மாறியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

நுகேகொடை ஆனந்த சமரகோன் வெளியரங்கில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற தேசிய சுதந்திர முன்னணியின் முதலாவது பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் பொதுக்கூட்டத்தை முன்னிட்டு நுகேகொடையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஆயுதம் தரித்த இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்பில் பெருமளவில் ஈடுபட்டிருந்தனர்.

முன்னணியின் பொதுச் செயலாளரும் எம்பியுமான நந்தன குண திலக உட்பட முன்னணியுடன் இணைந்துள்ள அனைத்து எம்.பிக்களும் கலந்துகொண்டனர். கூட்டத்திற்கு சமுகமளித்த அனைவரும் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னரே கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

வெளியரங்கு மேடை சிகப்பு துணியால் அலங்கரிக்கப்பட்டிருந்ததோடு பெரிய கிரீடம் மேடை மேல் வைக்கப்பட்டிருந்தது. பாரிய தேசியக் கொடி மேடை பின்னணியில் காணப்பட்டுடன் பொன்னிறத்திலான ஐந்து நட்சத்திரங்களை கொண்ட கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

முன்னணியின் தலைவரும் எம்.பி.யுமான விமல் வீரவன்ச மாலை 5 மணியளவில் பலத்த கரகோஷங்களுக்கு மத்தியிலும் பாதுகாப்பிற்கு மத்தியிலும் மேடைக்கு வருகை தந்ததுடன் கலைஞர்கள் ஐவருக்கு கட்சியின் அங்கத்துவ சான்றிதழ் வழங்கப்பட்டது.



இங்கு தொடர்ந்து உரையாற்றிய விமல்வீரவன்ச எம்.பி. இன்று ஜே.வி.பிக்குள் புதியதை ஏற்றுக்கொள்ளும் தலைமைத்துவம் கிடையாது.

பழைமையான ஊன்றுகோல் வாதமும் அடிப்படை வாதமும் மக்களுக்கும் நாட்டுக்கும் நன்மைகளை பெற்றுக்கொடுக்க முடியாதுள்ளது. ஆனால் எமது முன்னணி மாற்றங்களை எதிர்கொள்ளத் தயாராகவே புதியதொரு பயணத்தை மேற்கொண்டுள்ளது.

ஜே.வி.பி. இன்று புலிகளுக்கு சார்புத் தன்மையான வியூகங்களை முன்னெடுப்பதோடு ரணில் விக்கிரமசிங்கவின் ஜூனியர் அணியாக மாறியுள்ளது. எமது நாட்டிலுள்ள சுதந்திரக் கட்சிக்கும் தலைமைத்துவம் இல்லை.

அது ராஜபக்ஷ கட்சியாக மாறியுள்ளது. ஐ.தே. கட்சிக்குள் பல தலைவர்கள் ஜே.வி.பிக்குள்ளும் தலைமைத்துவம் இல்லை. (அ)


## சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் மரணசாதன அதிகாரப்பத்திர அலுவலரால், வெளியிடப்படும் அறிவித்தல்

வழு/இல.04.2008
தத்துவம்

காலஞ்சென்ற சொக்கலிங்கம் ஜனகன் மரணச் சொத்து தொடர்பாக ,குடியியல் நடை முறைச் சட்டக் கோவையின் 528ஆம் பிரிவின் கீழான விண்ணப்பம்

சொக்கலிங்கம் ஜனகன் கைம்பெண்
விஜயலட்சுமி,
நாவற்குளி மேற்கு, கைதடி.
-மனுதார்

எதிர்:-
1.ஜனகன் உஸ்மயாள்
2.ஜனகன் ஞானக்குமரன்
3.இளையதம்பி சொக்கலிங்கம்
மூவரும் நாவற்குளி மேற்கு, கைதடி.
-3 ஆம் எதிர்மனுதார் 1,2 ஆம் எதிர் மனுதார்களின் வழக்கு பாதுகாவலராக தோற்றம்
-எதிர் மனுதார்கள்.

காலஞ்சென்ற சொக்கலிங்கம் ஜனகனின் மரணச் சொத்து தொடர்பாக, சாதன நிர்வாகத்துவப்பத்திரம் பெறுவதற்காக இம் மன்றில் மனுதாரால் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்படி மரணச் சொத்து தொடர்பாக மரணசாதன நிர்வாகத் தத்துவப்பத்திரமொன்றை மேலே குறிப்பிட்ட மனுதாரருக்கு வழங்குமாறு கட்டளையொன்றை வழங்கப்படுவதற்கு ஆட்சேபனையுடைய ஆளெவரும் 2008ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அத்தகைய ஆட்சேபனையை (சத்தியக்கடதாசியின் ஆதாரத்துடன்) இம் மன்றில் கோப்பிடுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றீர்கள்.

வரைவு:

மனுதாரரின் சட்டத்தரணி

மரணசாத அதிகாரப்பத்திரம் அலுவலர்,
மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி.
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
சாவகச்சேரி.

(1418)

# கோடிக்கணக்கான பணப்பரிசை அறிவித்த மர்மப் பெண்ணின் அசரீரி வாக்கு


தந்தையுடன் கிளேயரி

(லண்டன்)

லண்டனில் வளர்ப்பு பிராணிகள் கடையொன்றை நடத்திவரும் கிளேயரி என்ற பெண்ணுக்கு அண்மையில் நம்ப முடியாத விசித்திர அனுபவமொன்று ஏற்பட்டுள்ளது. அவரது கடைக்கு மனநிலை பாதிக்கப்பட்டவர் போல் காணப்படும் பெண்மணியொருவர் அடிக்கடி வருவது வழமையாகும். சம்பவதினம் கடைக்கு வந்த அப்பெண்மணி இங்கு எவரோ ஒருவருக்கு கோடி கோடியாக பணம் கொட்டப்போகிறது என் அசரீரி போல் கூறிவிட்டுச் சென்றுள்ளார்.

பைத்தியக்காரப் பெண் புலம்புகிறாள் என கிளேயரி அப்பெண்மணியின் வார்த்தைகளை அலட்சியப்படுத்தி விட்டு தனது கடமையைத் தொடர்ந்தார்.

ஆனால் அப்பெண்மணி சென்று சில மணித்தியாலங்களில் கிளேயரின் தந்தை டோனி நட்பிரவுண் (54 வயது) தொலைபேசியில் தொடர்பு கொண்டு இன்ப அதிர்ச்சித் தகவலைக் கூறினார்.

நாம் வாங்கிய இணையத்தள அதிர்ஷ்ட இலாப சீட்டுக்கு 25லட்சம் ஸ்ரேலிங் பவுண் பெறுமதியான பரிசு விழுந்துள்ளது என தந்தை கூறிய போது கிளேயரிக்கு தன்னையே நம்ப முடியவில்லை.

மேற்படி பெண்மணி கோடி கோடியாக பணம் கொட்டப்போவதாக எதேட்சையாக கூறிச்சென்றாரா அல்லது எதிர்காலத்தை துல்லியமாக கணிக்கும் தனது அமானுஷ்ய ஆற்றல் மூலம் உய்த்தறிந்து கூறினாரா என கிளேயரி வியப்படைந்தார்.

பரிசுத்தொகையை வாங்கி வைப்புச் செய்த கிளேயரி அப்பெண்மணி எங்கே என்று தேடினார். வழமையாக அடிக்கடி கடைக்கு வரும் அப்பெண்மணியே அதன் பின் காணும் வாய்ப்பு அவருக்கு கிடைக்கவேயில்லை.

இது தொடர்பில் டோணி நட்பிரவுன் கருத்து தெரிவிக்கையில் சிலருக்கு அமானுஷ்ய சக்தி இயல்பாக உள்ளது என புத்தகங்களில் படித்திருக்கிறேன். அப்படி ஒருசக்தி அப்பெண்மணிக்கும் உள்ளது என நம்புகிறேன் என்று கூறினார். (அ)

# இத்தாலியின் சிம்பாபேவிற்கான தூதுவர் மீள அழைப்பு

(இத்தாலி)

இத்தாலியின் சிம்பாபேவிற்கான தூதுவரை மீள அழைத்துள்ளதாக அந்நாட்டு வெளிநாட்டு அமைச்சகம் செய்தி வெளியிட்டுள்ளது. அதேவேளை சிம்பாபே அதிபர் ரொபட் முகாபேக்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டமையை அடுத்து ஐரோப்பிய சங்கத்தின் ராஜதந்திரிகள் சிம்பாபேயிலிருந்து வெளியேறுமாறு இத்தாலியின் வெளிவிவகார அமைச்சர் பிரான்கோ பிரட்டினி தூதுவர் மரியோ பொலக்ன ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## உலக தரிசனம்

# இந்திய வம்சாவளி அமெரிக்கர்களை கவர்ந்திழுத்துள்ள ஒபமாவின் அனுமார் பக்தி


ஒபமாவின் அனுமார் சிலை

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பராக் ஒபாமாவின் அனுமார் பக்தியானது அவர் பக்கம் இந்திய வம்சாவளி அமெரிக்கர்களை கவர்ந்து 'இழுத்துள்ளதாக அமெரிக்க தினசரியான வோஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

முன்பு ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஹிலாரி கிளின்டனுக்கு ஆதரவு அளித்த இந்திய வம்சாவளி அமெரிக்கர்கள் பராக் ஒபாமா தனது அதிர்ஷ்டத்துக்காக கையடக்கமான பித்தளை அனுமான் சிலையொன்றை தன்னுடன் எப்போதும் வைத்திருக்கும் இரகசியம் வெளியானதை அடுத்து அவர் பக்கம் தமது கவனத்தை திசை திருப்பியுள்ளதாக கூறப்படுகிறது. இது தொடர்பில் வோஷிங்ரனை அடிப்படையாகக் கொண்ட அரசியல் நிதி சேகரிப்பு ஆலோசகரான பாவ்னா பண்டிற் விபரிக்கையில்,

ஒபாமாவின் அனுமார் பக்தியானது அவர் மீது இந்திய வம்சாவளி அமெரிக்கர்களுக்கு புதிய அக்கறையை ஏற்படுத்தியுள்ளதாக கூறினார். (அ)

# மனைவியின் பிரிவால் மனமுடைந்த நபர், கடந்தகால வாழ்க்கை முழுவதையும் ஏலத்தில் விற்பனை

(சிட்னி)

தனது மனைவியிடமிருந்து விவாகரத்துப் பெற்றமையால் மனமுடைந்த அவுஸ்திரேலிய வாழ் பிரித்தானியர், தனது தற்போதைய வாழ்க்கை முழுவதையும் 399,300 அவுஸ்திரேலிய டொலருக்கு ஏலத்தில் விற்பனை செய்ய இணங்கியுள்ளார்.

அயன் உஷர் (44வயது) என்ற இந்த நபர், தனது கடந்தகால வாழ்க்கையின் கசப்புணர்வுகளை முற்றாக மறந்து புது வாழ்க்கையொன்றை ஆரம்பிக்கும் முகமாக வீடு, கார், மோட்டார் சைக்கிள், வேலை மற்றும் நண்பர்கள் உட்பட தனது அனைத்து உடைமைகளையும் கடந்த 22ஆம் திகதி "ஈபே" இணையத்தளம் மூலம் ஏலத்தில் விட்டார்.

ஒரு வார காலமாக இடம்பெற்ற இந்த ஏல விற்பனையானது 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவு பெற்றது. எதிர்பார்த்ததிலும் குறைந்த விலைக்கே தனது தற்போதைய வாழ்க்கை விலை போயுள்ள போதும் அது குறித்து தான் வருத்தமடையவில்லை என அயன் உஷர் தெரிவித்தார்.



எனினும் தனது வாழ்க்கையைக் கொள்வனவு செய்தவர் யார் என்ற தகவலை அயன் உஷர் வெளியிடவில்லை.

தனது முன்னாள் மனைவியுடனான ஐந்து வருடகால வாழ்க்கையை ஞாபகப்படுத்தும் அனைத்தையும் துறந்து புதிய வாழ்க்கையொன்றை வாழத்தான் திட்டமிட்டுள்ளதாக அயன் உஷர் கூறினார். (அ)

# சிற்றுண்டிச்சாலைகளில் புகைப்பிடித்தல் தடை

(நெதர்லாந்து)

நெதர்லாந்தில் உள்ள மதுபான நிலையங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளில் புகைப்பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. இங்கு காணப்படும் 300க்கும் மேற்பட்ட தேநீர் கடைகளில் மார்ஜுனா எனப்படும் போதைப்பொருட்கள் விற்கப்படுவதால் இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# காட்டுத்தீ காரணமாக கலிபோனியா மாநிலத்தில் அவசரகால நிலைமை பிரகடனம்

அமெரிக்க கலிபோர்னியா மாநிலத்தில் ஆயிரக்கணக்கான காட்டுத் தீ சம்பவங்கள் கட்டுப்பாட்டை மீறி இடம் பெற்றதையடுத்து அம்மா நிலத்தில் அவசரகால நிலைமையை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் பிரகடனப்படுத்தியுள்ளார். (அ)

# இராணுவ நடவடிக்கையில் பாகிஸ்தானில் 07 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானிய கைபர் பிராந்தியத்தில் இஸ்லாமிய போராளிகளுக்கு எதிராக திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது 07பேர் பலியாகியுள்ளனர்.

பெஷாவர் நகரில் கடந்த 03 நாட்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த இராணுவ நடவடிக்கையின் ஒரு கட்டமாக போராளிகள் தங்கியிருந்ததாக சந்தேகிக்கப்படும் வீடு ஒன்று தகர்க்கப்பட்டதை அடுத்தே இந்த உயிர்ப்பலிகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

மேற்படி வீடானது எறிகணைத்தாக்குதல் மூலம் தகர்க்கப்பட்டதாக போராளி குழுத் தலைவர் தெரிவித்த அதேவேளைஅந்த வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் வெடித்து சிதறியமை காரணமாகவே இந்த அனர்த்தம் இடம்பெற்றதாக அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் வடமேற்கில் பிராந்திய எல்லையில் சனிக்கிழமை பாதுகாப்பு படையினரால் இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதை அடுத்து போராளிகள் பெஷாவர் நகரை நோக்கி நகர்ந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது வானொலி நிலையம், விசாரணை நிலையம் என்பன உட்பட போராளிகளுக்கு சொந்தமான பல கட்டிடங்கள் தாக்கியளிக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தானின் புதிய அரசாங்கம் பதவியேற்ற பின் அங்கு மேற்கொள்ளப்படும் முதலாவது இராணுவ நடவடிக்கை இது வென்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# அதிபர் முகாபேவை ஆபிரிக்க ஒன்றியம் இடைநீக்கம் செய்ய வேண்டும் கென்ய பிரதமர் கருத்து

ஜிம்பாவ்வேயில் சுதந்திரமான நியாயமான தேர்தல்கள் நடைபெறும் வரையில் ஆபிரிக்க ஒன்றியத்திலிருந்து ராப்பர்ட் முகாபேயை இடைநீக்கம் செய்யவேண்டும் என கென்யாவின் பிரதமர் ரயிலா ஓடிங்கா கோரியுள்ளார்.


எகிப்தில் நடைபெறும் ஆபிரிக்க ஒன்றியத்தின் உச்சிமாநாட்டில் முகாபேயை கலந்து கொள்ள அனுமதித்தது ஒரு ஆபத்தான முன்னுதாரணம் என ரயிலா ஓடிங்கா நைரோபியில் கூறியுள்ளார்.

இதனிடையே ஜிம்பாப்பே குறித்த உண்மையை எதிர் கொள்ளவேண்டிய தருணத்தில் ஆபிரிக்கத் தலைவர்கள் இருக்கிறார்கள் என ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு மூத்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

அந்நாட்டின் அதிபராக மீண்டும் முகாபே பொறுப்பேற்றுக்கொண்டுள்ளதை ஒட்டிய சர்ச்சை மிகவும் கவலையளிக்கக்கூடிய நிலையில் இருப்பதாக எகிப்தில் நடைபெறும் ஆபிரிக்க ஒன்றியத்தின் உச்சி மாநாட்டில் உரையாற்றும் போதே இந்தக்கருத்தை ஐக்கிய நாடுகள் சபையின் துணைத்தலைமை செயலரான அஷாரோஸ் மிகிரோ வெளியிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உயர்அதிகாரி இவ்வாறு கருத்து வெளியிட்டபோது அரங்கில் முகாபேயும் அமர்ந்திருந்தார். இந்த உச்சி மாநாட்டில் முகாபேயின் பிரசன்னமற்ற ஆபிரிக்க தலைவர்களுக்கு ஒரு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியதென்று அங்கிருக்கும் செய்தியாளர் ஒருவர் தெரிவிக்கிறார்.

நடைபெற்று முடிந்த அதிபர் தேர்தலுக்கான மறுவாக்கு பதிவில் முகாபே ஒருவரே வேட்பாளராக இருந்த நிலையில் இந்த தேர்தல் சிறிது கூட ஜனநாயக அளவுகோளை எட்டவில்லை என்று இது குறித்த கருத்துக்களை வெளியிட்டுள்ள ஆபிரிக்க ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப் பாளர்கள் கூறியுள்ளனர். தனிப்பட்ட முறையில் சில பார்வையாளர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வரும் ஆபிரிக்கத் தலைவர்கள் ஜிம்பாப்வேயில் எழுந்துள்ள சர்ச்சையை தாங்கள் கையாலும் விதம் கூட்டாக ஆபிரிக்க ஒன்றியம் எதிர் கொள்ளும் ஒரு பெரிய சோதனை என்று தெரிவித்துள்ளார்கள். (அ)



# கச்சா எண்ணெய் விலை புதிய உயரத்தை எட்டியுள்ளது



சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை முன்பில்லாத ஒரு புதிய உயரத்தை மீண்டும் எட்டியுள்ளது.

லண்டன் வர்த்தகத்தில் ஒரு கட்டத்தில் பிரெண்ட் வடகடல் வகை கச்சா எண்ணெயின் விலை பீப்பாய் ஒன்றுக்கு நூற்று நாற்பது டொலர்கள் என்கிற விலையை கிட்டத்தட்ட எட்டியுள்ளது.

இதனிடையே எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளும் சில முன்னணி நபர்களும் விலைகளை எவ்வாறு சீராக நிலை நிறுத்துவது என்பது குறித்து விவாதிக்க மெட்ரிட்டில் கூறுகிறார்கள்.

தேவைகள் அதிகரித்துள்ளது, டொலரின் மதிப்பில் வீழ்ச்சி, முதலீட்டாளர்கள் மற்ற பொருட்களில் முதலீடு செய்வது, நிச்சயமற்ற அரசியல் நிலைமைகள் போன்ற காரணங்கள் அண்மைக் காலத்தில் எண்ணெய் விலை யேற்றத்துக்கு காரணமாக இருந்துள்ளன என்று ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளார். (அ)

# ஆபிரிக்காவின் தலைமை முன்வைத்த கோரிக்கைகளை ஐ.நா.ஏற்காது

## சிம்பாவே தூதுவர் தெரிவிப்பு

(சிம்பாவே)

தேர்தலுக்கு முன்னர் இடம்பெற்ற வன்முறைகளை காரணம் காட்டி சிம்பாவே மீது தடை விதிக்கப்படவேண்டும் என முன்வைக்கப்பட்ட கோரிக்கை ஐக்கியநாடுகளுக்கான சிம்பாவே தூதுவர் நிராகரித்துள்ளார்.

ஆபிரிக்காவின் தலைமையில் முன்வைக்கப்பட்ட இந்த கோரிக்கையை ஐக்கிய நாடுகள் நிறைவேற்றும் என தான் நம்பவில்லை எனவும் அமெரிக்க ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் தெரிவித்துள்ளார்.

சிம்பாவே ஜனாதிபதி றொபோட் முகாபேயின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் படவேண்டும் என எகிப்தில் நடைபெற்று வருகின்ற ஆபிரிக்க ஒன்றிய நாடுகளின் உச்சி மாநாட்டில் அதிக அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகையிலேயே சிம்பாவே தூதுவரின் கருத்து வெளியாகியுள்ளது. (அ)

# தரம் -5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் 7

பகுதி –I
நேரம் – 45 நிமிடம்

ஆசிரியர் க.கலாமோகன்
யாழ்.சுதுமலை சிந்மய பாரதி வித்தி.

1) பூவின் மேலே பூவொன்று
பூத்திருக்கும் புதுமை பார்
நண்பனே அது பூவல்ல
வண்ணத்துப் பூச்சியல்லோ

இங்கு கூறப்பட்டது ஒரு பிராணி பற்றியது என்றால் பூ என்ற சொல்லின் கீழ் கோடிடுக. அவ்வாறின்றி தாவரம் பற்றியது என்றால் பூச்சி என்ற சொல்லின் கீழ் கோடிடுக.

2) கண்ணைச் சிமிட்டல் போல
கன்னங்கரிய இருளிலே
விண்ணில் ஒளிரும் வெள்ளி
விந்தை நிகழ்வு தம்பி

இப்பாடல் வானத்தில் உள்ள நட்சத்திரம் பற்றியது என்றால் கண்ணை என்ற சொல்லினை சுற்றி வட்டமிடுக. அவ்வாறின்றி நிலவு பற்றியது என்றால் தம்பி என்ற சொல்லின் கீழ் கோடிடுக.

3) கறுப்பு நிறக் குட்டி தான்
காலடியில் வந்ததுவே
பாலை நக்கி குடித்துமே
பாய்ந்து பாய்ந்து ஓடுதே

இந்தப் பாடலில் கூறப்பட்டது ஒரு பிள்ளை பற்றியது என்றால் கறுப்பு என்ற சொல்வின் கீழே கோடிடுங்கள் அவ்வாறு இன்றி பூனையுடன் தொடர்பு உடையது என்றால் பாய்ந்து என்ற சொல்லை சுற்றி வட்டமிடுக

*பின்வரும் பாடலை படித்து வினாவுக்குரிய 'விடையை தெரிவு செய்க.*

இனிய காலை நேரம்
இதழ் விரித்துச் சிரிக்கும்
பனி மணிகள் சூடி
பளபளக்கும் கண்ணில்

4) இதழ் விரித்துச் சிரிக்கும் என்பதனால் கருதப்படுவது யாது?
1.சிரிக்கும் 2.பூ மலர்கிறது 3.இதழ் சிரிக்கும்


5) பனி மணிகள் என்பதன் கருத்து
1.பனித்துளிகள் 2.முத்துக்கள் 3.மகரந்த மணிகள்


*சரியான விடையின் கீழ் கோடிடுக.*

6) பராக்கிரம மகாவித்தியாலயம் கடுமையான பயிற்சியில் ஈடுபட்ட போதும் நடந்து முடிந்த கரப்பந்தாட்ட போட்டியில் தோல்வியை தழுவியது. இப்பாடசாலை தோல்வி அடைந்தமைக்குக் காரணம்
1.அது பயிற்சியில் ஈடுபடாமை
2.மாணவர்கள் முயற்சியில் ஈடுபடாமை
3.திறமைமிக்க எதிரணியை சந்தித்தமை

7) விமலா பாடசாலைக்கு அருகில் வசித்து வந்தாள் எனினும் அவள் பல நாட்களாக பாடசாலைக்கு சமூகமளிக்கவில்லை. அவள் பாடசாலைக்கு சமூகமளிக்காததற்கு காரணமாக இருக்கக்கூடியது எது?
1.பாடசாலை விடுமுறைக்காலம் 2.விமலா சுகவீனமுற்றிருந்தமை
3.பாடசாலை பஸ் வராமல் இருந்தமை

உருவை பார்க்கவும் வெற்றிடத்திற்கு பொருத்தமான பகுதியை தெரிவு செய்க.

8) 

9) 

10) இங்கு அதிக தடவைகள் குறிக்கப்பட்டுள்ள இலக்கம் யாது?

385382657
434296329
(......................)

*சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.*

11) ஒரு கடிகாரத்தின் .ஒரு நாளில் மணிக்கம்பியை நிமிடக்கம்பி எத்தனை தடவை முடிந்தும்?
1. 22 2. 23 3. 24

12) நேற்று திங்கட்கிழமை நாளை மாதத்தின் 22ஆம் திகதி இம்மாத்தின் 15ஆம் திகதி என்ன கிழமையாக இருந்திருக்கும்?
1.செவ்வாய் 2.புதன் 3.திங்கள்

முதல் இரு வரிசையிலும் உள்ள சொற்களின் தொடர்பை ஒத்த வகையில் மூன்றாவது வரிசையில் வரும் சொல்லை புள்ளிக்கோட்டில் எழுதுக.

| 13) தாயகம் | யகம் | 14)பரபரப்பு | பரப்பு |
|---|---|---|---|
| அரவிந்தம் | விந்தம் | அரவிந்தம் | விந்தம் |
| சுத்தநாதம் | (............) | சாவணம் | (............) |

*பின்வரும் நெய்யரியல் உள்ள தகவல்களை வாசிக்கவும்*

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | 3 | 3 | A | A | A | அ |
| 4 | 1 | அ | உ | 3 | 2 | F |
| A | D | 3 | 7 | 6 | 3 | ல |
| அ | R | உ | 5 | அ | உ | எ |
| ம | ப | 9 | 5 | 1 | 6 | C |

15) இலக்கம் 3இன் எண்ணிக்கை 5 இருப்பின் எழுத்து "அ" வைச்சுற்றி வட்டமிடுக. இல்லாவிடின் இலக்கம் 9 ஐச் சுற்றி வட்டமிடுக.

16) இலக்கம் 1இன் மீது "X" அடையாளமிடுக.

17) 1,3 4 என்னும் இலக்கங்கள் ஒவ்வொன்றும் 3 தடவைகள் இருப்பின் எழுத்து "ப" வைச்சுற்றி வட்டமிடுக இல்லாவிடின் "D" என்ற எழுத்தின் மீது "X" அடையாளமிடுக

தொடக்கத்தில் தரப்பட்டுள்ள இரு வாக்கியங்களிலும் கருத்திற்கேற்ப சரியான கூற்றை தெரிவு செய்க.

18) குமாரின் வீடு சங்கரின் வீட்டுக்குக் கிழக்கே உள்ளது. சங்கரின் வீடு வசந்தனின் வீட்டுக்குக் கிழக்கே உள்ளது. எனவே
1.குமாரின் வீடு வசந்தனின் வீட்டுக்கு கிழக்கே உள்ளது
2.வசந்தனின் வீடு குமாரின் வீட்டுக்கு அண்மையில் உள்ளது
3.வசந்தனின் வீடு சங்கரின் வீட்டுக்கு தூரத்தில் உள்ளது

முதலில் தரப்பட்டுள்ள கூற்றுப் பிழையானது ஆகும். இக் கூற்று ஏன் பிழையானது என்பதை தெரிவு செய்க.

19) தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு ஆயத்தமாகும் மாணவன் ஒருவன் அரசாங்க ஊழியரான தனது தந்தையைப் பார்த்து இவ்வாறு கூறினான் "கவனமாகப் பாடங் களைப் படித்து இவ்வருடம் பரீட்சையில் சித்தியடையும் நான் அதற்கான உதவிப்பணத்தை பெற்றுவிடுவேன்" மாணவனின் இக் கூற்று ஏன் தவறானது?
1.புலமைப்பரிசில் அவன் சித்தியடைய மாட்டான் என்பதால்
2.பரீட்சை கடினமாக அமையும் என்பதனால்
3.அரசாங்க ஊழியராக அவனது தந்தை இருப்பதனால் உதவிப்பணம் கிடைக்காது என்பதனால்


20)தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஆயத்தமாகும் மாணவன் ஒருவன் தனது ஆசிரியருக்கு பின்வருமாறு கூறினான் "புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ் வினாக்களுக்கு 100 புள்ளிகள் பெற்று நான் பரீட்சையில் முதன்மை சித்தி பெறுவேன்" இக் கூற்று ஏன் தவறனாது?
1. புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ் வினாத்தாள் மிக கடினம் என்பதனால்
2. தமிழில் திறமை இருப்பினும் பரீட்சை வினாத்தாளுக்கு விடை அளித்தல் கடினம் என்பதால்.
3. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ் வினாத்தாள் இல்லை என்பதால்


***பின்வரும் நெய்யரியில் இருக்கும் எழுத்துக்களை பயன்படுத்தி வினாக்களுக்குரிய விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.***


| | | | | |
|---|---|---|---|---|
| சி | லா | ர | ட | ஞ் |
| கு | ல | ம் | க | ச |
| தி | ண் | ற | ள | ப் |
| சி | க | ம் | கை | கே |

21) கையூட்டு என்ற பொருள் தரும் ஒரு சொல்......................................
22) யானையை இவ்வாறு அழைப்பதுண்டு......................................
23) விழி என்பதைக் குறிக்கும் வேறு சொல்......................................

***பின்வரும் உருவில் நிழற்றப்பட்ட பகுதியை காட்டும் விடையை தெரிவு செய்க.***

24) 
1. 1/5 2. 5/10 3. 3/5

25) 
1. 1/8 2. 2/6 3. 1/4

26) 
1. 4/8 2. 1/4 3. 2/8

**கோலத்தைப் பாருங்கள்**


27) 345 → 453 → 534 → [ ]

வெற்று அடைப்புக்கு பொருத்தமான இலக்கம் எது?
1. 345 2. 435 3. 344

28 9999 → 9996 → 9966 → [ ]

வெற்று அடைப்புக்கு பொருத்தமான இலக்கம் எது?
1. 9999 2. 6699 3. 9666

**பின்வரும் குறுக்கெழுத்து புதிரில் இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் கருத்துள்ள சொற்களை அமைத்து இப் புதிரை நிரப்புக. தரப்பட்டுள்ள உதவு கூற்றுக்களை பயன்படுத்துக.**



29) மேலிருந்து கீழ்
1.நீரிலும் நிலத்திலும் வாழும் ஊர்ந்து செல்லும்
2. ஊர்ந்து செல்லும் காலில்லாத பிராணி
4.பசு ஈனுவது (கீழ் இருந்து மேல்)
5. பேசக் கூடிய பறவை


30) இடமிருந்து வலம்
1. பசுவின் ஒத்த சொல்
2.பூனை விரும்பிக் குடிப்பது
3.நாம் உயிர்களிடத்தில் செலுத்த வேண்டியது


**கீழே ஒவ்வொரு நிரையிலும் உள்ள முதல் இரு சொற்களும் ஏதோ ஒரு வகையில் பொருத்தமுடையன இதே போல் மூன்றாவது சொல்லிற்குப் பொருத்தமுடைய ஒரு சொல்லை தெரிவு செய்து கோடிடுக.**

31) BUT : TUB : EAT ..............................................
1.EAT 2.AET 3.TAE

32) இயற்கை : செயற்கை : நீதி ..............................................
1. நீதி 2. அநீதி 3. வழக்கு

***தரப்பட்டுள்ள படங்களை அவதானித்து ? குறியீட்டினால் காட்டப் பட்டுள்ள இடத்துக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.***

33) 

34) 

***பின்வரும் தொடரின் கருத்தை விபரிக்கும் விடையை தெரிவு செய்க.***

35) வேலி பயிரை மேய்ந்தாற் போல் என்பதன் கருத்து
1.வேலியில் பயிர் வளர்தல் போல 2.நம்பியோரே தீங்கிழைத்தல்
3.பயிரைச் சுற்றி வேலி அடைத்தல் வேண்டும்

36) அத்தி பூத்தாற் போல என்பதன் கருத்து
1.மிகவும் அருமையாக நடை பெறுதல் 2.இணைபிரியாதிருத்தல்
3.அத்தி பூப்பதில்லை

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.**

37) ஐந்து ஞாயிற்றுக்கிழமைகள் உள்ள ஓர் ஏப்ரல் மாதத்தில் அந்த ஞாயிற்றுக் கிழமைகளின் தேதிகளின் மொத்தத்திற்கு இருக்கத்தக்க உயர்ந்த பட்ச எண் பெறுமானம்.
1. 75 2. 80 3. 85

38)ஒரு வீதியின் இரு மின்கம்பங்களிடையே 3 கொடிகள் வீதம் தொங்க விட்டு அவ்வீதியை அலங்கரிக்க தீர்மானிக்கப்பட்டது. வீதியில் 5 மின் கம்பங்கள் இருந்தால் அவற்றுக்கிடையே தொங்க விடுவதற்கு எத்தனை கொடிகள் தேவை?
1. 15கொடிகள் 2. 16 கொடிகள் 3. 12 கொடிகள்

***சரியான விடையை தெரிவு செய்து கோடிடுக.***

39) வீடு ஒன்றை கட்டுவதற்கு 6 மனிதர்களுக்கு 10 நாட்கள் தேவை எனக் கணக் கிடப் பட்டுள்ளது. இதே வேலையை 3 மனிதர்களை பயன்படுத்தினால் எத்தனை நாட்களில் முடிப்பர்.
1. 10 நாட்கள் 2. 20 நாட்கள் 3. 5 நாட்கள்

40) 8மனிதர்களுக்கு இரு நாட்களுக்கு 16 இறாத்தல் பாண் தேவை 4 மணிதர்களுக்கு இரு நாட்களுக்கு எத்தனை இறாத்தல் பாண் தேவை?
1. 4இறாத்தல் 2. 16 இறாத்தல் 3. 8இறாத்தால்

## சர்வதேச ஒருநாள் போட்டி வரலாற்றில்

# 290 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று சாதனை படைத்தது நியூசிலாந்து அணி

(அபர்டீன்)

விஷ்வரூபமெடுத்த மக்கலம், மார்ஷல் அதிரடி சதம் பெற நியூசிலாந்து அணி,290 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அயர்லாந்து அணியை வீழ்த்தி ஒருநாள் போட்டியில் சாதனை படைத்தது.

சர்வதேச ஒருநாள் பேட்டி வரலாற்றில் 290 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அணி என்ற சாதனையை நியூசிலாந்து அணி படைத்தது.

இதற்கு முன்பு 2007ஆம் ஆண்டு உலகக் கிண்ண போட்டியில் இந்திய அணி 257 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பேர்முடா அணியை வெற்றி கொண்டமையே சாதனையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட நியூசிலாந்து அணி 3 டெஸ்ட், ஒரு இருபது -20 போட்டி மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடியது.

இம் மூன்று தொடர்களும் முடிபண்டந்த நிலையில் நியூசிலாந்து அணி இரு ஒருநாள் போட்டி கொண்ட முத்தரப்பு தொடரில் அயர்லாந்து, ஸ்கொட்லாந்து அணிகளுடன் மோதுகின்றது.

இதில் நேற்று அபர்டீனில் நடைபெற்ற முதலாவது போட்டியில் நியூசிலாந்து அணி அயர்லாந்து அணியுடன் மோதியது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அயர்லாந்து அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களானா மார்ஷல், மக்கலம் ஆகியோர் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.

இந்த ஜோடி அயர்லாந்து அணியின் பந்துவீச்சுக்களை விரட்டி சதம் குவித்தனர்.

இவ் ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 42.2 ஓவர்களில் 266 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது மக்கலம் 135 பந்துகளில் (11 பவுண்டரிகள்,10 சிக்ஸர்கள் உட்பட) 166 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து மார்ஷலுடன் இணைந்த ரெய்லர் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார்.

மறுமுனையில் சிறப்பாக ஆடிய மார்ஷல் 141 பந்துகளில் (11 பவுண்டரிகள்,4 சிக்ஸர்கள் உட்பட) 161 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

மார்ஷல் ஆட்டமிழக்கும்போது நியூசிலாந்து அணி49.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களையிழந்து 380 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இறுதியாக இருந்த ஐந்து பந்துகளிலும் ரெய்லர் 22 ஓட்டங்களைக் குவித்து அரைச் சதம் கடக்க நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 402 ஓட்டங்களை குவித்தது.

இதில் ஆட்டமிழக்காமல் ரெய்லர் 24 பந்துகளில் (5பவுண்டரிகள்,4 சிக்ஸர்கள் உட்பட) 59 ஓட்டங்களை எடுத்தார்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 403 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி சௌத்தி, மேஷனின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் 28.4 ஓவர்களுள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 112 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 290ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் கொன்ஷ்ன் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும் வில்ஷல் 21, சிட் 15 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சௌத்தி,மேஷன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் ஓரம், பட்டேல் மற்றும் எலியேட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் நியூசிலாந்து அணி 2 போட்டிகள் கொண்ட முத்தரப்பு தொடரில் 2 புள்ளிகளைப் பெற்று முன்னிலை பெற்றது.

### சாதனைகள்

★ சர்வதேச ஒருநாள்போட்டி வரலாற்றில் நேற்று நடைபெற்ற 2 ஆயிரத்து 727-வது போட்டியில் நியூசிலாந்து அணி 290 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அயர்லாந்து அணியை வெற்றி கொண்டமையே அதிகூடிய ஓட்டங்களால் வெற்றி பெற்ற சாதனையாகும்.

இதற்கு முன்பு கடந்த 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரின்போது இந்திய அணி 257 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பேர்முடா அணியை வீழ்த்தியமையே சாதனையாக இருந்தது.

★ சர்வதேச ஒருநாள் போட்டிகளில் முதலாவது விக்கெட்டுக்காக அதிக ஓட்டங்களைக் குவித்த 2-வது ஜோடி ஆக 266 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்து நியூசிலாந்து அணியின் மார்ஷல் -மக்கலம் ஜோடி பதிவு செய்துள்ளது.

முதலாவது இடத்தில் இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான சனத் ஜெயசூர்ய, உபுல் தரங்க ஜோடி இங்கிலாந்து அணிக்கு எதிராக 2007ஆம் ஆண்டு 286 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்து சாதனையை படைத்துள்ளது.

★ சர்வதேச ஒருநாள் போட்டி வரலாற்றில் 400 ஓட்டங்களைக் கடந்த 5-வது அணியாக நியூசிலாந்து தன்னைப் பதிவு செய்துள்ளதுடன் அதிகூடிய ஓட்டங்கள் என்ற பட்டியலில் 6-வது இடத்தை பதிவு செய்துள்ளது.

இதில் இலங்கை (50 ஓவர்களில் 9 விக்கெட்டை இழந்து 443 ஓட்டங்கள்) தென்னாபிரிக்கா (49.5 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 438 ஓட்டங்கள்) அவுஸ்திரேலியா (50 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 434 ஓட்டங்கள்) தென்னாபிரிக்கா (50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 418 ஓட்டங்கள்) இந்தியா (50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 413 ஓட்டங்கள்) எடுத்து முதல் 5 இடங்களில் உள்ளன. (5)

## ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர்

# இறுதிப்போட்டிக்கு இலங்கை அணி தகுதி; இந்தியா-பாகிஸ்தான் இன்று பலப்பரீட்சை



(கராச்சி)

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது. இதன் சுப்பர் 4 சுற்றுக்கு இந்தியா,பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் அணிகள் தகுதி பெற்றன.

இச் சுற்றின் ஆரம்ப ஆட்டத்தில் இந்தியா 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷையும் 2-வது ஆட்டத்தில் இலங்கை அணி 64 ஓட்டங்கள் வித்தியாச்த்தில் பாகிஸ்தானையும் தோற்கடித்தன.

நேற்று முன்தினம் நடந்த 3-வது ஆட்டத்தில் இலங்கை158 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியையும் வீழ்த்தியது.

சுப்பர் 4 சுற்றின்4-வது ஆட்டம் இன்று நடக்கிறது. இதில் இந்தியா -பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

பாகிஸ்தான்அணி மிகுந்த நெருக்கடியில் உள்ளது. தோல்வி அடையும் பட்சத்தில் இறுதிப்போட்டிக்கான வாய்ப்பை இழந்துவிடும். இலங்கை அணி இறுதிப் போட்டியில் நுழைந்து விட்டது.

இந்திய அணி லீக் ஆட்டத்தில் பாகிஸ்தானை வீழ்த்தியிருந்தது. மிகப்பெரிய இலக்கை சாதாரணமாக எடுத்தது.

இதனால் நம்பிக்கையுடன் உள்ளது. சுரேஷ் ரெய்னாவின் ஆட்டம் மிகவும் அபாரமாக உள்ளது. அவர் இரண்டு சதம் அடித்து இருக்கிறார்.

இதேபோல் சேவாக், காம்பீர், அணித் தலைவர் தோனி,யுவராஜ் சிங் ஆகியோரும் துடுப்பாட்டத்தில் நல்லநிலையில் உள்ளனர்.

பந்து வீச்சு எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. காயத்திலிருந்து குணமடைந்த இர்பான் பதான் இன்றைய ஆட்டத்தில் இடம்பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத்தொடரில் மிகவும் மோசமாக ஆடி வந்ததால் பாகிஸ்தான்அணியின் சகல துறை ஆட்டக்காரர் அப்ரிடி இன்றைய ஆட்டத்தில் நீக்கப்படுவார் என்று தெரிகிறது.

இதேபோல் வகாப் ரியாஸ் பந்துவீச்சும் சிறப்பாக இல்லாததால் அவரும் நீக்கப்படுகிறார்.

பாகிஸ்தான் வேகப்பந்துவீச்சாளர் உமல் குல் காயமடைந்திருப்பது அந்த அணிக்கு பலவீனத்தை ஏற்படுத்தியுள்ளது. துடுப்பாட்டத்தில் சல்மான் பட் அணித்தலைவர் செயிப் மலிக், யூனிஸ்கான், மிஸ்பா உல்ஹக் ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர்.


இந்தியாவின் அதிரடியை சமாளிக்க பாகிஸ்தான் கடுமையாகப் போராடவேண்டியிருக்கும். இப்போட்டி இலங்கை நேரப்படி மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

### 117-வது முறையாக மோதல்

இரு அணிகளும் இன்று மோதிக் கொள்வது 117-வது போட்டியாகும். இதுவரை நடந்த 116 போட்டிகளில் இந்தியா 45 ஆட்டத்திலும் பாகிஸ்தான்67 ஆட்டத்திலும் வெற்றி பெற்றுள்ளன. 4 ஆட்டம் முடிபின்றி கைவிடப் பட்டது.

(5)

# காலிறுதிக்கு முன்னேறினார் பெடரர்; வில்லியம்ஸ் சகோதரிகள் அசத்தல்



(லண்டன்)

விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் பெடரரின் வெற்றிநடை தொடர்கிறது.

நேற்று முன்தினம் நடந்த 4-வது சுற்றுப் போட்டியில் அவுஸ்திரேலியாவின் லைடன் ஹெவிட்டை வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

ஆண்டின் 3-வது கிராண்ட்ஸ்லாம் தொடரான விம்பிள்டன் ஓபன் டென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் 4-வது சுற்றுப்போட்டியில் நம்பர் 1 வீரர் சுவிட்சர்லாந்தின் ரோஜர்பெடரர் அவுஸ்திரேலியாவின் லெய்டன் ஹெவிட்டை எதிர்கொண்டார்.

இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பெடரர் முதல் செட்டை 7:6 என கடும் போராட்டத்திற்கு பின் வென்றார்.

இவரது புயல்வேக சேர்விஸ்களால் திணறிப்போன ஹெவிட் 2:6 என 2-வது செட்டையும் பறிகொடுத்தார்.

3-வது செட்டிலும் ஆதிக்கம் செலுத்திய பெடரர் அதை 6:4 என தன்வசப்படுத்தினார். இறுதியில் 7:6,6:2,6:4 என்ற செட்களில் வென்றார்.

### வெற்றிச் சகோதரிகள்

பெண்கள் ஒற்றையர் நான்காவது சுற்றுப் போட்டியில் வீனஸ் வில்லியம்ஸ் ரஷ்யாவின் அலிசா கிளெபனோவாவை சந்தித்தார்.

இதில் வீனஸ் 6:3, 6:4 என்ற நேர்செட்களில் எளிதாக வென்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 6:3,6:3 என சக நாட்டு வீராங்கனை பெத்தானி மேட்க்கை வென்றார்.

சேர்பியாவின் ஜோன் கோவிச் தாய்லாந்தின் தாமரின் தானசுகர்னிடம் 3:6,2:6 என்ற செட்களில் வெற்றியைப் பறிகொடுத்தார். தானசுகர்ன் காலிறுதியில் வீனஸை சந்திக்கிறார்.

### பயஸ் ஜோடி வெற்றி

நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் இரட்டையர் 3-வது சுற்றுப்போட்டியில் இந்தியாவின் பயஸ்,செக் குடியரசின் லூகாஸ் டவுகி ஜோடி 7:6, 7:6, 6: 4 என அமெரிக்காவின் டிரவிஸ் பெரட் , சுலோவேக்கியாவின் பிலிப் போலசெக் ஜோடியை வென்று காலிறுதிக்கு முன்னேறியது. (5)

## ஏழு வீடுகளில் ஒரே இரவில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணார்பண்ணை பெரியதம்பிரான் வீதியிலுள்ள ஆறு வீடுகளில் கடந்த 29 ஆம் திகதி திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அன்றிரவு 10 மணியளவில் குறிப்பிட்ட வீடுகளுக்குச் சென்ற திருடர்கள் நீர் இறைக்கும் இயந்திரம், சைக்கிள்; றேடியோ மற்றும் ஆடு என்பவற்றினைத் திருடிச் சென்றுள்ளனர்.

இதேவேளை அன்றிரவு பூநாறி மரத்தடியிலுள்ள வீடொன்றிலும் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ந)

## ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விடுதலைப்புலிகளுடன் பேச்சு?

### தினமினவில் தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்குப் பகுதி தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் காணப்பட்டபோது ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் இரகசியமாக விடுதலைப்புலிகளின் தலைவர் ஒருவரைச் சந்தித்துள்ளதாகப் புலனாய்வுத் தகவல்களை மேற்கோள்காட்டி தினமின நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

சம்பூர் மற்றும் வாகரைப் பகுதிகளுக்குக் குறித்த ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் இரகசிய விஜயம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜே.வி.பியினர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்த காலப் பகுதியில் அரச சார்பற்ற நிறுவ்னம் ஒன்றின் உதவியுடன் குறித்த பகுதிக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த ஜே.வி.பி. உறுப்பினர் திருகோணமலையைச் சேர்ந்தவர் என தினமின நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. (ச-5)

## புலமைப் பரிசில் பரீட்சை ஓகஸ்ட் 17 ஆம் திகதி

(கொழும்பு)

5 ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நடத்தப்படும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இவ்வருடம் 5 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். கடந்த வருடங்களை விட இம்முறை இப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகும். இம் முறை பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் பாடசாலை விடுமுறைக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படும் என்றார். (ச-5)

## ஓமந்தைப் பகுதியில் இருந்து...

தொடர்பான விபரங்களை வெளியிட அவர் மறுத்து விட்டார். இதனிடையே இன்று சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர் ஓமந்தைக்குக் கடமைக்குச் சமுகமளிக்க மாட்டார்கள் என்ற தகவல் அந்தக் குழுவைச் சேர்ந்த அதிகாரிகளினால் கிளிநொச்சி மற்றும் வவுனியா அரசாங்க அதிபர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை அந்த அதிகாரிகளும் உறுதிப்படுத்தியுள்ளனர். இதற்கிடையில் ஓமந்தையிலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை விலகச் செய்யும் வகையில் நேற்று என்ன சம்பவம் நிகழ்ந்தது என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஜெனீவாவிலுள்ள பேச்சாளர் கார்லால் ஹடட் தெரிவிக்கையில்,

இது ஒரு வெடிப்புச் சம்பவம் என்றும் இருந்த போதிலும் இது குறித்த தெளிவான தகவல்கள் இன்னமும் கிடைக்கவில்லை என்றும் இது குறித்து தாம் சம்பந்தப்பட்ட தரப்புடன் தொடர்பிலிருப்பதாகவும் கூறினார்.(ச-5)

## அரச...

னால் அதிகளவு எரிபொருள் செலவாகுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஊழியர்களின் போக்குவரத்து மற்றும் காரியாலய மின்சாதன உபயோகம் என்பவற்றினால் பெருமளவிலான செலவு ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ச-5)

## மாங்குளத்...

தின் மீதான இந்தத் தாக்குதல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாக விமானப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகளுக்குப் பலத்த இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் விமான்ப் படை தெரிவித்துள்ளது. எனினும் இந்தத் தாக்குதல் பற்றியோ இதனால் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றியோ விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (ச-5)

## வவுனியாவில் கைது செய்ய...

உறவினர்களில் ஒரு சிலர் மாத்திரம் உள்ளே சென்று கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்கான பிணைக் கையெடுத்திட அனுமதிக்கப்பட்டனர்.

சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் விசாரணைக்காகப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டதாகவும் அவர்களைத் தாங்கள் கைது செய்யவில்லை என்றும் பொலிஸார் தம்மிடம் தெரிவித்ததாகக் கைது செய்யப்பட்டவர்களைப் பொலிஸ் நிலையத்தில் சென்று பார்வையிட்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

வவுனியாவில் பொலிஸார் மீது அண்மையில் நடத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் தற்கொலைக் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கையின் ஓர் அங்கமாகவே இச் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகளை இரவல் பெற்று ஓட்டிச் சென்றவர்கள் உட்பட பல தரப்பட்டவர்களும் வவுனியா நகரப் பகுதியில் கைது செய்யப்பட்டதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

நேற்று நண்பகல் வரையில் சிலரை மாத்திரமே பொலிஸார் விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்துள்ளதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர். (ச-5)

## கோதுமை...

ஒன்றிலிருந்து 79 ரூபா விலையில் விற்பனை செய்யுமாறும் அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இதேவேளை றுகுணு-24 கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட சீனி, லக்ஸ்பிறே பால் மா ஆகியனவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவ் ஒதுக்கீட்டிற்கான வழங்கல் கட்டளைகளைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்று யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார். (ச)

## இலங்கை...

கடைப்பிடித்து வருவதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலங்கை விவகாரங்களில் சீனாவின் தலையீட்டை மட்டுப்படுத்தும் நோக்கில் இராஜதந்திர உபாயங்களை இந்திய அரசாங்கம் மிக சூசகமாக அரங்கேற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இந்தியாவில் தமிழ் ஆதரவாளர்களைத் திருத்திப்படுத்தும் வகையில் ஆயுத விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாலைதீவு, உஸ்பெகிஸ்தான், மொங்கோலியா உள்ளிட்ட பல நாடுகளுக்கு இந்தியா இராணுவப் பயிற்சிகளை வழங்கிய போதிலும் இலங்கை தொடர்பில் அதிக கரிசினை காட்டுவதாகச் சுட்டிகாட்டப்படுகின்றது.

இந்தியாவின் முன்னணி இராணுவப் பயிற்சி முகாம்கள் பலவற்றில் இலங்கைப் படை வீரர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகப் புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## அம்பாந்...

உலங்கு வானூர்திகள் அப் பகுதிக்கு வந்து அவசர அவசரமாகப் படையி னரை ஏற்றிச் சென்றனர்.

படையினரின் கோட்டைக்குள் வெற்றிகரமாகத் தாக்குதல் நடத்தி இழப்புக்களை ஏற்படுத்தி விட்டு எந்த சேதங்களுமின்றி விடுதலைப்புலிகளின் அணி தளம் திரும்பியது எனப் புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## ஊடகவியலாளர்கள் மீதான...

கத்தின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்க முயல்வதும் அரசு மேற்கொண்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களைத் தடுக்க முயல்வதும் கவலைக்குரிய விடயங்களாகும்.

கிழக்கின் உதயம் அபிவிருத்தித் திட்டத்தின் முக்கிய அம்சமாக இப் பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம். இதன் மூலம் இப் பிரதேசத்தில் விவசாயம், கடற்றொழில் மற்றும் ஏனைய தொழிற்றுறைகளுக்கான போக்குவரத்து வசதிகள் இலகுவாகும்.

அத்துடன் இப் பிரதேச மக்களின் கல்வி, சுகாதாரம் மற்றும் வீட்டு வசதி போன்றவை மேம்படுவதற்கும் இது துணை புரியும். கிழக்கில் பயங்கரவாதத்தினால் நசுக்கப்பட்ட மக்கள் அப் பிரதேசம் அரச படைகளினால் விடுவிக்கப்பட்ட பின்னர் இன்று சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கின்றனர்.

வடக்கில் உள்ள மக்களுக்கும் இதே ஜனநாயக உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கவே அரசாங்கம்பயங்கரவாதிகளுடன்போராடிக்கொண்டிருக்கின்றது என்றும் ஜனாதிபதி கூறினார்.

இந்த வைபவத்தில் அமைச்சர்களான டி.பி.எக்கநாயக்க, ஏ.எல்.எம். அதாவுல்லா, பேரியல் அஷ்ரப், ஹுசைன் பஹிலா, பி. தயாரட்ண மற்றும் கிழக்கு முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட உயர் அதிகாரிகளும் அமெரிக்கத் தூதரகப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ச-5)

## ஜனாதிபதியை ஏற்றச் சென்ற...

இந்தத் தாக்குதல் தொடர்பில் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாவது, அம்பாறை அறுகம்பைப் பாலத்தினைத் திறந்து வைப்பதற்காகப் பலத்த பாதுகாப்புடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு சென்றிருந்தார்.

அவரது பயணத்தினை ஒட்டி சுமார் 8 ஆயிரத்திற்கும் அதிகமான படையினர் அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். பாலத்தினைத் திறந்து வைத்து மகிந்த ராஜபக்ஷ மக்கள் மத்தியில் உரையாற்றிக் கொண்டிருந்த போது பிற்பகல் ஒரு மணியளவில் பொத்துவில் செங்காமம் சிறப்பு அதிரடிப் படையினரின் முகாமை நோக்கி விடுதலைப்புலிகளால் அகோர எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலினைத் தொடர்ந்து அப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. இதனையடுத்து மகிந்த ராஜபக்ஷவை ஏற்றிக் கொண்டு கொழும்பு நோக்கி விரைவதற்காக உடனடியாக அங்கு விரைந்து கொண்டிருந்த ஹெலிகொப்டர் மீதும் விடுதலைப்புலிகள் கனரகத் தாக்குதலை நடத்தினர்.

அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு காட்டுப் பகுதிக்கு மேலாக ஹெலிகொப்டர் பறந்து கொண்டிருந்த போது பிற்பகல் 1.20 மணியளவில் விடுதலைப்புலிகளால் இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதலுக்கு இலக்கான ஹெலிகொப்டர் சிவப்பு விளக்கை எரிய விட்டவாறே தாழ்வாகப் பறந்து உல்லைப் பாலத்திற்கு அருகிலுள்ள பாடசாலை மைதானத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது எனப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பயணத்திற்கு என ஒதுக்கப்பட்டிருந்த ஹெலிகொப்டர்களில் ஒன்று அவசரமாகத் தரையிறக்கப்பட்டதனை வான் படையும் ஒப்புக் கொண்டிருக்கின்றது.

இது குறித்து வான் படைப் பேச்சாளர் ஜனக நாணயக்கார தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பயணத்திற்கு என ஒதுக்கப்பட்டிருந்த மூன்று ஹெலி கொப்டர்களில் ஒன்று அறுகம்பை உல்லைப் பகுதியில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டுள்ளது.

நிலத்தில் இருந்து நடத்தப்பட்ட தாக்குதலால் ஹெலிகொப்டரின் எரிபொருள் தாங்கிப் பகுதியில் சிறிது சேதம் ஏற்பட்டது. இதனையடுத்தே ஹெலிகொப்டர் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

இயந்திரக் கோளாறு காரணமாகவே ஹெலிகொப்டர் தரையிறக்கப்பட்டதாக முதலில் தெரிவிக்கப்பட்ட போதும் தற்போது இது ஒரு தாக்குதல் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை உகன இராணுவ முகாமில் எரிபொருளை நிரப்பி விட்டு அறுகம்பை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த போதே இந்தக் ஹெலிகொப்டர் தரையிறக்கப்பட்டுள்ளது.


தற்போது இந்தக் ஹெலிகொப்டரில் ஏற்பட்ட கோளாறு சீர் செய்யப்பட்டு வருகின்றது. தரையிறக்கப்பட்ட ஹெலிகொப்டரில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இருக்கவில்லை. அவர் அறுகம்பைப் பாலத் திறப்பு விழாவில் அச் சமயம் இருந்தார் என்றார்.

இது இவ்வாறிருக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பயணித்த ஹெலிகொப்டருக்குப் பாதுகாப்பு வழங்க வந்த ஹெலிகொப்டரே தாக்குதலுக்கு இலக்கானதாகப் பொத்துவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சேன சுரவீர தெரிவித்துள்ளார்.

செங்காமம் அதிரடிப் படை முகாம் மீது சில மோட்டார்கள் விழுந்து வெடித்ததையடுத்து அப் பகுதியின் மீதாக பறந்து வந்த ஹெலி மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் கூறினார்.

கஞ்சிக்குடிச்சாறுப் பக்கமாக இருந்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.(ச-5)

## மரண அறிவித்தல்



### இராசா நடராசா

(இளைப்பாறிய தபால் அதிபர்)

கொக்குவில் நந்தாவிலைப் பிறப்பிடமாகவும் பழைய வீதி, கோப்பாய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட இராசா நடராசா அவர்கள் நேற்று (01.07.2008) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு இராசா, சின்னத்தங்கச்சி தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற அப்புத்துரை இராசம்மா அவர்களின் மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதி அப்புத்துரையின் அன்புச் சகோதரனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், சுகிர்தராஜ் (இணைப்பாளர் ஜெசாக்), துஷியந்தி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

அனுஷாந்தி(ஆசிரியர், யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), கிரிதரன் (அமெரிக்கா) ஆகியோரின் மாமனாரும், சுஹந்தர்யா (மாணவி, புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), ஆத்மிஹா, நிதிலா(அமெரிக்கா), நிர்ஷாந் (அமெரிக்கா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
சுகீர் (மகன்) (1419)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.07.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.